விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 05 வியாழக்கிழமை (17.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 060

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

## மாதகல் கடற்பரப்பில் நேற்று 26தமிழக மீனவர் பிடிபட்டனர்

(மாதகல்)

மாதகல் கடற்பரப்பில் நேற்று மாலை அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 26பேர், மாதகல் மீனவர்களால் பிடிக்கப்பட்டு இளவாலைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

· மாதகல் கடற்பரப்பில் கரையிலிருந்து 3 கிலோமீற்றர் தூரத்தில் அத்துமீறி 07 இழுவைப் படகுகளில் வந்து மீன் பிடியில் ஈடுபட்ட 26 தமிழக மீனவர்களை நேற்றிரவு மாதகல் மீனவர்கள் பிடித்துவந்து இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். வடமராட்சி கடற்பரப்பில் 112 தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் வடமராட்சி மீனவர்களால் பிடிக்கப்பட்ட நிலையில் இரண்டாவது நாளாக நேற்று மாதகல் கடற்பரப்பில் 26 மீனவர்கள் பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மீனவர் கைதை கண்டித்து தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்

### கனிமொழி கைது

(சென்னை)


தமிழகத்தின் நாகப்பட்டினம், காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டதைக் கண்டித்து தி.மு.கவினர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

சென்னை மைலாப்பூரில் இருந்து முதல்வர் கருணாநிதியின் மகள் கனிமொழி எம்.பி. தலைமையில் பேரணியாகப்புறப்பட்டு இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற போது கனிமொழி எம்.பி. கைதுசெய்யப்பட்டார்.

அப்போது செய்தியாளரிடம் கனிமொழி, தமிழக மீனவர் (20ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் மன்மோகன் சிங் கண்டனம்

# இலங்கை கடற்படையினரே மீனவர்களை கைதுசெய்தனர்



## இந்திய ஊடகங்கள் தகவல்

(டில்லி)

**தமிழக மீனவர்கள் 112 பேரையும் அவர்களின் 18 இழுவைப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினரே கைது செய்துள்ளனர். இச் சம்பவத்தை தாம் வன்மையாக கண்டிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.**

தமிழக மீனவர்கள் 112பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்ததாக தகவல் வெளியிட்டுள்ள இந்திய ஊடகங்கள், இச் சம்பவத்தை இந்தியப் பிரதமர் வன்மையாகக் கண்டித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன. டில்லியிலுள்ள பிரதமர் மன்மோகன் சிங்கின் வாசஸ்தலத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே பிரதமர் மன்மோகன் சிங் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் 112பேருக்கும் 28ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 112பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி உத்தரவிட்டார்.

வடமராட்சி தொண்டைமானாறு முதல் நாகர்கோவில் வரையிலான கடற்பரப்பில் நேற்று முன்தினம் மாலை அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 112பேர் வடமராட்சி மீனவர்களால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட தமிழக மீனவர்களை நேற்றுக் காலை பருத்தித் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் வேட்புமனு நிராகரிப்பு 24ந் திகதி தீர்ப்பு வெளிவரும்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டுமனுக்கள் மீதான தீர்ப்பு எதிர்வரும் 24 ஆம் திகதி வழங்கப்படும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்த இந்த மேன் முறையீட்டைச் செய்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தமிழில் மொழிபெயர்ப்பதில் ஏற்பட்ட குழப்பமான நிலையே வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம் என மனுதாரர் சார்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபல சிங்கள நடிகை கொலை

(கொழும்பு)

பிரபல சிங்களத் திரைப்பட நடிகையும் தயாரிப்பாளருமான வினு வெத்தமுனி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானையில்அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இனந்தெரியாத மூன்று பேரினால் இத் தாக்குதல் நடத்தப் (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுகின்றது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது அரச பயங்கரவாதம் மற்றும் அடக்கு முறைகள் தலைவிரித்து ஆடுகின்றன. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையிலிருந்து அனைத்து வகையான பயங்கரவாதங்களும் துடைத்தழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் உரத்த குரலில் பீற்றிக் கொண்டாலும் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கட்டுநாயக்காவில் நேற்று நடைபெற்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் புலிகள் இல்லை உறுதிப்படுத்துகின்றார் டி.ஜி.பி.

(சென்னை)

தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க செயற்பாட்டாளர்கள் எவரும் இல்லை என தமிழக காவற்துறைத் தலைவர் லத்திகா சரண் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல் தலைவர்கள் மீதான அச்சுறுத்தல் குறித்த எச்சரிக்கைகளுக்கு மத்தியில் திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழக சட்டசபைத் தேர்தல்களின் போது அரசியல் தலைவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் சட்ட ஒழுங்கு நிலைமைகள் மற்றும் தேர்தலின் போது எதிர்பார்க்கப்படும் பிரச்சினைகள், அவற்றை எதிர்கொள் (20ஆம் பக்கம் பார்க்க)

## டெங்குக் காய்ச்சல் மாணவன் மரணம்

(கரவெட்டி)

டெங்குக் காய்ச்சல் காரணமாக அல்வாய் வடக்கில் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த தர்மரட்ணம் துஷாந் (வயது 18) என்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவனே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்று முன்தினம் மாலை தனியார் கல்விநிலையத்திற்குச் (20ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**
Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## மக்களின் தேவையை அரசாங்கம் உதாசீனம் செய்யவில்லை–ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டு மக்களின் தேவைகளை அரசாங்கம் ஒருபோதும் உதாசீனம் செய்ததில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். வலுவான நாட்டை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பல வழிகளிலும் பாடுபடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் நலனுக்காக அரசாங்கம் பாடுபட்டபோதும் சில சக்திகள் போலியான வதந்திகளைப் பரப்பி வருகின்றன. இவ்வாறான வதந்திகளைத் தடுக்க முடியாது என்றார். (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**
பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# யாழ். தேர்தல் மனு நிராகரிப்பு வழக்கு

# பிரேம ஜயந்தவும் ஆதர ஜயந்தவும் ஒன்றா?

# எதிர்த் தரப்புச் சட்டத்தரணி கேள்வி

(கொழும்பு)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அக்கட்சி தாக்கல் செய்த ஆணைகோரும் மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்றது.

அவ்வேளையில் ஐ.ம.சு. முன்னணியின் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு எதுவும் வழங்கப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன ஆட்சேபித்தன.

United People's Freedom Alliance எனும் கட்சியின் பெரை தமிழில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என எழுதியதால் அவ்வாறானதொரு கட்சி இல்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரிலேயே அரசியல் கட்சி பதிவு செய்யப்பட்டிருக்கிறது என காரணம் கூறி ஐ.ம.சு. முன்னணியின் 16வேட்பு மனுக்களை யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி நிராகரித்திருந்தார். 3நகர சபைகள், 16 பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் இவற்றில் அடங்கும்.

இதற்கு எதிராக ஆணை கோரும் மனுக்களை ஐ.ம.சு.மு. சார்பில் அதன் செயலாளரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தாக்கல் செய்திருந்தார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, தெரிவத்தாட்சி அதிகாரி பி.குகநாதன், ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, இலங்கை தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நீதிபதிகள் சத்ய ஹெட்டிகே, உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. இவ்விசாரணையின் போது திஸ்ஸ அத்தநாயக்க சார்பில் வழக்குரைஞர் ஜுவந்தா அருளானந்தம் சகிதம் ஆஜரான வழக்கறிஞர் விரான் கொரயா, கூட்டமைப்பா, முன்னணியா என்ற சர்ச்சை குறித்து வாதாடுகையில் Alliance என்பதற்கான அர்த்தம் என்னவென்பது சம்பந்தப்படாத விடயம் என்றார்.

பிரேம ஜயந்தவும் ஆதர ஜயந்தவும் ஒன்றா? என அவர் கேள்வி எழுப்பினார். இம்மனுவை நிராகரிக்க வேண்டும் என அவர் கோரிகை விடுத்தார்.

இதேவேளை யட்டிநுவர பிரதேச சபைக்கான ஐ.ம.சு முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணையில் ஐ.தே.க செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சார்பில் ஆஜரான எம்.ஏ.சுமந்திரன் வாதாடுகையில் மேற்படி வேட்பு மனுவில் குறிப்பிடப்பட்ட கட்சியின் பெயரில் எக்ஸத் ஜனதா ஆகிய இரு சொற்கள் இல்லாதிருப்பதாக தெரிவித்தார்.

விதிகளின்படி சுயேட்சைக் குழுக்களின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பிலுமே வேட்பு மனுக்களை தாக்கல் செய்யமுடியும் எனவும் இதனால் மேற்படி ஆவணம் வேட்புமனுவல்ல எனவும் வழக்குரைஞர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார். நீதிபதிகள் இவ்வழக்கு விசாரணையை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (ந-5)

## ஆன்மீக சொற்பொழிவுக்காக இந்தியா பயணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வை தி.மயூரகிரி சர்மா ஆன்மீகக் கல்வி சார் பயணம் மேற்கொண்டு தென்னிந்தியா சென்றுள்ளார்.

காஞ்சிப் பெரியாரின் சங்கரமடத்துச் சட்டத்தரணி தி.உமாசங்கரின் அழைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவதற்காக இவர் தென்னிந்தியா சென்றுள்ளார்.

நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்களின் புதல்வரான இவர், யாழ்.பல்கலைக் கழக ஊடகக் கற்கை மாணவன் என்பதும் நீர்வேலி இணையத்தளத்தின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பூரணைத்தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை முற்றோதல் இன்று வியாழக் கிழமை காலை 9மணி முதல் யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீவலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் (கடையிற் சுவாமி கோயிலில்) மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும்.

இதில் அடியார்கள் பங்குபற்றி பயன் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## உலக வங்கியின் வடக்கின் திட்டங்கள் யாழில் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியால் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை மு.ப.10.30 மணிக்கு யாழ்.பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

உலக வங்கியால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் வடமாகாணத்தில் மேற் கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உலக வங்கியால் வடமாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களுக்கு உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட குழு நேரடியாக இன்று முதல் 26ஆம் திகதி வரை விஜயம் செய்து தமது அபிவிருத்தி திட்டங்களை மேற்பார்வை செய்யவுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்கள், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், சுட்ட, விவசாய, கால்நடை உற்பத்தித்திணைக்களத்தலைவர்கள், காணி, கூட்டுறவு அபிவிருத்தி, உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர்கள், வடமாகாண பிரதி தபால்மா அதிபர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (ந-5)

## அரசியல் கட்சிகளின் செயலர்களை தேர்தல் ஆணையாளர் சந்திப்பார்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து கட்சிகளின் பொதுச் செயலாளர்களுடன் கலந்துரையாட தேர்தல் ஆணையாளர் நாயகம் திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி இது தொடர்பான சந்திப்பு எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 3மணிக்கு தேர்தல் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கு இச் சந்திப்பிற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுதல் வழங்கவும் அரசியல் கட்சிகளின் பிரச்சினைகளை கேட்டறியவும் இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையாளர் நாயகம் கட்சிப் பிரதிநிதிகளை சந்திக்கும் முதல் சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

**வேலையாட்கள் தேவை**
1.கணக்குப் பதிவாளர் (பெண்)
2.களஞ்சியக் காப்பாளர் (ஆண்/பெண்)
3.சிட்டை எழுதுனர் (ஆண்)
4.பணியாள் (ஆண்)
மேற்படி பதவிகளுக்கு அடிப்படை ஆங்கில அறிவு மற்றும் கணினி அறிவுடன் தகுதியுடையவர்கள் உரிய ஆவணங்களுடன் 21.02.2011 திங்கட்கிழமை காலை 9.30-11.30 மணிக்குள் நேரில் வரவும்.
யாழ்ப்பாண இரும்பகம்,
ஏசியன் பெயின்ற்ஸ்,
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(3828)

**சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்**
வருடாந்தப் பொதுக்கூட்டம் 2011
காலம் : 27.02.2011
நேரம் : காலை 11.00மணி
இடம் : யாழ். மத்திய கல்லூரி
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
குறிப்பு : அங்கத்தவர்கள் தமது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்வரும் முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
திரு. பொ.கேதீசன்
28,அம்மன் வீதி, கந்தர்மடம்.
தொ.இல : 0773946501
பொதுச்செயலாளர்,
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
(3829)

**மனமுவந்து பாராட்டுகின்றேன்**
எந்தவித மனச்சலிப்புமின்றி வறுமை கொண்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிகள் புரிபவர்
திரு. இ. ச. பேரம்பலம் நாகரெத்தினம்
அவர்கள்.
பெருமைக்காக அலட்டிக் கொள்ளாதவர். இவருக்கு மனிதநேய ஈகையாளன் எனும் பட்டம் வழங்கப்பட்டமை எமக்கு மகிழ்வைத் தருவதாகும்.
இவரை எமது மக்கள் வரவேற்கின்றார்கள். இவரை மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்.



லாலா சோப்
உரிமையாளர், அச்சுவேலி

# இன்று ஒரு தகவல்

## அந்தப் பறவைகள்

அமெரிக்காவில் உள்ள ஓர் நூல் நிலையத்திற்கு ஒருத்தர் சென்றார். அங்கு ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தார்.

லிலியன் தால் என்ற ஜேர்மனியர் ஒரு பெரியகாற்றாடியில் ஏறி ஆகாயத்தில் பறந்த கதையை அந்தப்புத்தகத்தில் இவர் படித்தார்.

படித்துவிட்டு அதைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்.

தன்னுடைய சகோதரனிடம் சொன்னார். இருவரும் சேர்ந்து புதிதாக ஒரு முயற்சியில் ஈடுபட்டார்கள். அதன் விளைவு தான் ஆகாயவிமானம்.

ரைட் சகோதரர்கள் இருவருமே அதிகம் படித்தவர்களில்லை உயர் நிலைப் பள்ளிப் படிப்பைக் கூட முடிக்க வில்லையாம்.

சிறிய வயதில் அவர்கள் என்ன செய்வார்கள் என்றால்...

இறந்துபோன மிருகங்களின் எலும்புகளை பொறுக்கி கொண்டுபோய் உரத்தொழிற்சாலையில் கொடுத்துவிட்டு காசு வாங்கிக்கொண்டு வருவார்களாம். அதன் பின் ஒரு அச்சகத்தை ஏற்படுத்தி தினசரிப்பத்திரிகை வெளியிடுவதற்கு முயற்சி செய்தார்களாம். அந்த முயற்சி பயனளிக்கவில்லை. அதன்பின் சைக்கிள் திருத்தும் கடை ஒன்று நடத்தினார்களாம்.

பிழைப்புக்காக இப்படியெல்லாம் செய்தால் கூட அவர்களுடைய ஆசையெல்லாம் ஆகாயத்தில் பறக்க வேண்டும் என்பதுதான்.

இருவரும் அடிக்கடி மலையடிவாரத்துக்குப்போய் ஆகாயத்தில் வட்டமிடும் பருந்துகளையும் ஏனைய பறவைகளையும் அண்ணாந்து பார்த்து கொண்டே இருப்பார்களாம்.

முதலில் ஒரு "கிளைடர்" தயார் பண்ணி சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள்.

சிறிதுகாலம் கழித்து அதில் ஒரு இஞ்சினை தயார் செய்து பொருத்தினார்களாம்.

1903 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி உலக வரலாற்றில் ஒரு முக்கியமான நாள்.

அன்றுதான் ரைட்சகோதரர்களின் கனவு நனவாகியது. உலகத்தின் முதல் விமானம் பறந்தநாள் அது.

அவர்களுடைய விமானம் அன்றைக்கு 12 விநாடி தான் பறந்திருக்கிறது. 100 அடி தூரம் தான் போனதாம். இருந்தாலும் அதுவே ஒரு பெரிய சாதனைதான்.

மற்றவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அந்த சகோதரர்கள் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை. எதிர்பார்த்து நடந்தது.

இதில் என்ன ஆச்சரியம் என்பது போல் அவர்கள் நடந்து கொண்டார்களாம்.

1908 இல் அந்த இருவரில் ஒருவரான ஆர்வில் விமானத்தில் போய்க்கொண்டிருந்தபோது அது நொறுங்கி விழுந்து விட்டது.

அவருக்கு முது கெலும்பு முறிந்துவிட்டது. கடைசிவரைக்கும் அவர் மிகவும் கஷ்டப்பட்டாராம். அவர்களுக்கு தங்களை விளம்பரப்படுத்துவதில் இஷ்டமில்லை. பத்திரிகை நிருபர்களிடம் பேசுவது, படம் எடுத்துக் கொள்வது இதெல்லாம் அவர்களுக்கு விருப்பமில்லை.

''பறவைகளில் கிளி மட்டும் தான் பேசுகிறது. ஆனால் அதெல்லாம் அதிக உயரம் பறப்பதில்லையே'' என்று அவர்கள் ஒரு தடவை சொன்னார்களாம்.

அவர்களிருவரும் மிகவும் அடக்கமாக இருப்பார்களாம். தற்பெருமை துளிகூட கிடையாதாம்.

அந்த இருவரில் ஆர்வில்ரைட் மூத்தவர், வில்பர்ரைட் இளையவர்.

இவர் ஒரு தடவை தன்னுடைய காற்சட்டைப்பையில் இருந்து கைக்குட்டையை எடுத்திருக்கிறார். அப்பொழுது ஒரு சிவப்பு ரிபன் கீழே விழுந்திருக்கிறது.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த அவருடைய தங்கச்சி 'அது என்ன?' என்று கேட்டிருக்கிறாள்.

''ஓ... இதுவா... சொல்ல மறந்து விட்டேனே... பிரெஞ்சு சர்க்கார் எனக்களித்த கௌரவப் பட்டம் இது'' என்று மிகவும் சாதாரணமாகக் கூறினாராம்.

இன்னொரு விடயம்! அந்த இருவருமே கடைசிவரைக்கும் திருமணம் செய்து கொள்ளவில்லையாம்.

ஆகாயத்தில் பறக்கும் விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் எவ்வளவு அடக்கமாக இருந்திருக்கிறார்கள்என்பதை நினைக்கும் போது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

நம்ம ஆளு ஒருத்தன் மிகவும் பெருமையாகச் சொன்னான். "ஹெலிகொப்டரை நான் தான் கண்டுபிடித்தேன்" என்றான்.

"அது எப்படி?" என்றேன்.

ஆகாயத்தில் பறந்து வந்தது.... முதலில் நான் தான் அதைக் கண்டு பிடித்து மற்றவர்களிடம் சொன்னேன். எல்லோரும் ஓடி வந்து அண்ணாந்து பார்த்தார்கள்'' என்றான் மிகவும் பெருமையுடன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சீனி உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கான குறுகிய மற்றும் நீண்ட காலத்திட்டம் வகுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், விரைவில் புதிய வகை கரும்புச் செய்கை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கரும்புச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன. தற்போது நாட்டின் சீனித்தேவையின் 5 சதவீதமே உள்ளூர் உற்பத்தியிலிருந்து பெறப்படுகின்றது.

கடந்த வருடத்தில் சீனியை இறக்குமதி செய்வதற்காக 3 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாரிய தொழிற்சாலைக்குப் பதிலாக 100 முதல் 500 மெற்றிக் தொன் சீனியை உற்பத்தி செய்யக் கூடிய சிறிய தொழிற்சா லையை ஆரம்பிப்பதற்கு சிறு ஏற்றுமதி மற்றும் சிறு உற்பத்திப் பொருட்கள் அபி விருத்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

வடமாகாணத்தில் கரும்புச் செய்கை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தற்போது கிளிநொச்சிப்பகுதியில் பரீட்சார்த்தமாக இந்த செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோருக்கு நிவாரண விலையில் உரப்பொதி ஒன்று வழங்குவதற்கும் நிறுவனமொன்றுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதென்று தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# வலகம்பாகு மன்னன் கால சுரங்கப்பாதை கண்டுபிடிப்பு

முதலாம் வலகம்பாகு மன்னன் காலத்துக்கு உரிய சுரங்கப்பாதை ஒன்று ஊவா மகாணத்தின் சொரந்தோட்டை பிரதேசத் தில் உள்ள புத்த விகாரை ஒன்றுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் அகலம் ஐந்து மீற்றர் ஆகும். அண்மை நாட்களில் இப்பகுதியில் பெய்த அடைமழையை அடுத்து இச்சுரங் கப்பாதை வெளிப்பட்டுள்ளது இருக்கின்றது.

இதே வேளை இச்சுரங்கப்பாதை ஊடாக செல்கின்ற வெள்ள நீரால் நிலச்சரிவுகள் ஏற் படக்கூடும் என்று இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். (ஸ்ரீ-3)

# இலங்கையின் முதலாவது அதிவேக புகையிரத சேவை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது அதிவேக புகையிரத சேவை நேற்று காலிக்கும் மாத்தறைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த புகையிரதம் இவ்விரு நகரங்களுக்குமிடையில் மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரதக் கடவைகளை கடக்கும் போது எச்சரிக்கையாக இருக்கும்படிபொதுமக்களை இலங்கை புகையிரத திணைக்களம் கோரியுள்ளது.

இவ்விரு நகரங்களுக்கிடையில் சுமார் 90 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | - | 200 | 240 | 230 |
| உருளைக்கிழங்கு | 45 | 60 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 250-270 | 260 | 300 | 250 |
| தக்காளி | 130 | 160 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 80-90 | 100 | 100 | 120 |
| கரட் | 100 | 120 | 140 | 100 |
| பூசணி | 50-60 | 50 | 70 | 50 |
| புடோல் | 70 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 40-50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 200 | 240 | 250 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 130 | 180 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 150 | 130 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 170 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 160 | 130 |
| பீற்றூட் | - | 130 | 140 | 130 |
| கறிமிளகாய் | 230 | 200 | 250 | 250 |
| போஞ்சி | 120 | 140 | 150 | 170 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | 190 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 30-40 | 50 | 70 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 55 |

# இராசி பலன்

*17.02.2011*
*(மாசி 5, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*சதுர்த்தசி பிற்பகல் 4.52 மணிவரை*
*பூசம் காலை 7.05 மணிவரை*
*ஆயிலியம் பின்னிரவு 5.48 மணிவரை*
*இராகுகாலம் 2.03-3.33 மணிவரை*
*சுபநேரம் 8.03-9.33 மணிவரை*
*நடேசர் அபிசேகம் ,அமிர்தசித்தம்*

**மேடம்** தொட்டகாரியம் வெற்றி பெறும், ஆலயவழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீது பாசம் கூடும்.

**இடபம்** மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சிவன் வழிபாட்டில் சிறப்பினைக்காண வேண்டிய நாள், சுவாரஸ்யமான நாள்.

**மிதுனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், திருமண முயற்சிகைகூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகை கள் கிடைக்கும், பொருட் சேர்கையுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், பிள்ளைகளால் சிறுவிரயம் ஏற்படலாம், உங்களை விமர்சித்தவர்களிடம் எதிர்த்துப் பேசாமல் இருப்பீர்கள்.

**சிங்கம்** பரம்பொருளை வழிபட்டு நன்மை காணவேண்டிய நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களில் விழிப்புணர்ச்சி தேவை.

**கன்னி** பொதுவாழ்வில் மகிழ்வும், மரியாதையும் உயரும், பொருட்சேர்க்கையுண்டு, இல்லம்தேடி மகிழ்ச்சியான செய்தி வந்துசேரும், தொழிலில் புதியதிட்டங்களை வகுப்பீர்கள்.

**துலாம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், பணவரவால் திருப்திதரும், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**விருச்சிகம்** புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு,தந்தை வழியில் சுப செய்திகள் வந்துசேரலாம், சொத்துக்களால் நன்மையுண்டு.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை, உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்,

**மகரம்** இறை வழிபாட்டால் இனிமை சேரும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்** நோய் குணமடையும், பகைவர்கள் அனுசரணையாக நடப்பர், தொழில்வளர்ச்சி ஏற்படும், கடன்சுமைகுறையும், புதிய வழிவகையை கையாள்வீர்கள்.

**மீனம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று கைகூடலாம், கட்டடப் பணிகளைத் தொடர்வீர்கள்.

வளவன்

# ஸ்ரீ தியாகராஜா சுவாமிகளின் 164 ஆவது ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் சற்குரு ஸ்ரீதியாகராஜா சுவாமி களின் 164 ஆம் ஆராதனைவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை மன்றக்கலாமண்டபத்தில் க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8.30 மணிக்கு சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிக்கு பூசையும் வழிபாடும் இடம் பெறும். தொடர்ந்து 9 மணி தொடக்கம் 10 மணிவரை ஈழத்து முது பெருங் கலைஞர்களும் இளங்கலைஞர் களும் இணைந்து வழங்கும் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஆராதனை நடை பெறும். 10 தொடக்கம் 12 மணி வரை ஈழத்தின் முது பெரும் நாதஸ்வர வித்துவான்களும் தவில் வித்துவான்களினதும் பஞ்சரத்தின கீர்த் தனைகள் நாதாஞ்சலியும் பகல் 1.30 மணி யிலிருந்து 4.30 வரை ஈழத்தின் இசை விற் பன்னர்களின் இசை அர்ச்சனை என்பன இடம்பெறும்.

இந்நிகழ்வில் அன்பர்கள் கலா ரசிகர்கள், அபிமானிகள் அனை வரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற் பாட்டாளர்கள் அழைக்கின் றனர். (ஸ்ரீ-9)

# விக்ரம் -ராஜன் -கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும் 'விக்ரம் - ராஜன்- கங்கு' ஞாபகார்த்த மட்டுப்படுத்தப் பட்ட பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட வன்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கொக்கு வில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்று வருகிறது.

இதில் இன்றைய போட்டியில் காலை 8.30 மணிக்கு யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 1 மணிக்கு யாழ்.கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல் கலைக்கழக விளையாட்டு அணியும் மோத வுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியை எதிர்த்து யாழ்.ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஸ்ரீ)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் இந்துநாகரிகம், கிறிஸ்தவம், வணிகக்கல்வி, கணக்கீடு ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர் களை கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி பாடங்களுக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளையும் எடுத்து வரும்படி வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள் ளார். (ஸ்ரீ-3-19)

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான பயிற்சி செயலமர்வு

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் சகல பாடசாலைகளிலும் உள்ள தரம் 10,11 வகுப்புகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி கற்பிக்கும் புதிய ஆசிரியர்களுக்கான் பயிற்சி செயல மர்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும், 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 21ஆம் திகதி திங்கட்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வட மராட்சி வலய கணனி வள நிலையத்தில் நடாத் தப்படவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகள் மற்றும் புதிதாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை ஆரம் பிக்க இருக்கும் பாடசாலைகளில் கற்பிப் பதற்கு புதிய ஆசிரியர்களை உருவாக்கு வதற்குமான முதற்கட்டப் பயிற்சியாக இது அமைகிறது.

மேலும் பாடசாலையில் இருந்து ஒரு புதிய ஆசிரியர் மட்டுமே பங்குபற்றலாம்.

அத்துடன் பயிற்சிக்கு சமுகமளிக்கும் ஆசிரியர்கள் தரம் 10 வகுப்பு தகவல் தொடர் பாடல் மாணவரின் புத்தகத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் கொண்டு வருதல் வேண்டுமென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித் துள்ளார். (ஸ்ரீ-2-19)

# யாழ்.பல்கலையில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை இளம்பொருளியலாளர் மன்றத்தினால் 'இலங்கை மற்றும் இந்தியப் பொருளா தாரங்களின் வளர்ச்சியும் அபிவிருத்தியும்' பற்றிய கருத்தரங்கு நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 2 மணி வரை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் பொருளியற்துறை மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை லக்னோ பல்கலைக் கழக பொருளியல் பேராசிரியர் கலாநிதி மனோஜ்குமார் அகர்வல் நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக் கின்றனர். (ஸ்ரீ-9)

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்ட போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபி விருத்திச் சங்கம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களிடையே பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தவுள்ளது.

மேற்படி போட்டிகள் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று பதிவு செய்யுமாறு சங்கச் செயலாளர் திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)




# பல்வேறு கலைகள் சங்கமிக்கும் யாழ்ப்பாண இசை விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதும் இலைமறை காயாகக் காணப்படும் பண்பாட்டுக் கலைகள் உயிர்ப்பிக்கப்பட்டு வெளிக்கொண்டுவரும் நோக்குடனேயே யாழ்ப்பாண இசைவிழா நடத்தப்படவுள்ளதாக அரச சார்பற்ற நிறு வனங்களின் இணையத் தலைவர் வி.கேசவன் தெரிவித்துள்ளார்.

நோர்வே தூதுவராலயத்தின் அனுசர ணையுடன் யாழ்.சேவாலங்கா நிறுவனத் தால் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக் கிழமை தொடக்கம் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ள யாழ்ப்பாண இசைவிழா தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முன்தினம் சேவாலங்கா நிறுவனத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்,

இலங்கையில் பல்வேறு வகையான கலாசார ரீதியான நாட்டுப்புறக் கலைகளை அரங்கேற்றும் நோக்குடன் எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை 'யாழ்ப்பாண இசைவிழா' யாழ். சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக நடத் தவுள்ளோம்.

அதுமட்டுமல்லாது இந்நிகழ்ச்சி மூலம் இலங்கையில் இருக்கும் மிகச் சிறந்த கலைஞர்களை வெளிக்கொண்டு வருவ துடன் இந்தியா, நேபாளம், பாலஸ்தீனம் மற்றும் நோர்வே போன்ற நாடுகளிலிருந்து வரும் நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்வுகளை இங்குள்ளவர்கள் காணக் கூடியதாக இருக்கும்.

இந்த இசைவிழாவில் பங்குபற்றும் நாட்டுப்புறக் கலைக் குழுக்கள் அவர்களின் பண்பாட்டிற்கு அமைவாகத் தமக்கெனத் தனித்தனி மேடைகள் அமைத்து இம்மூன்று நாட்களும் காலை 10 மணி யிலிருந்து மாலை 3 மணிவரை தமது நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு குழுக் களும் மாலை 4 மணியிலிருந்து இரவு 10 மணிவரையான நேரத்தில் பிரதான மேடை யில் தமது நிகழ்வுகளை நடத்துவார்கள். இந்த விழாவை கண்டுகளிக்க வரும் பார்வை யாளர்களிடையே நாட்டுப்புற கலை தொடர் பான அறிவினையும் ஈடுபாட்டினையும் ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு நாட்டுப்புற கலைகளினதும் வரலாறு மற்றும் வளர்ச்சி படிகள் என்பன தொடர்பாக பயிற்சிப்பட்ட றைகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன விழாவைக் கொண்டு நடாத்தும் கலைஞர்க ளினால் முன்னெடுக்கப்படும்.

இந்த விழாவை கண்டுகளிக்கவரும் அனைத்துத் தரப்பு பார்வையாளர்களும் இலங்கையின் பலபாகங்களிலும் அதாவது மலைநாடு, வடக்கு, தெற்கு, மத்திய மாகாணம் மற்றும் கடலோரப்பிராந்தியங்களில் உள்ள அனைத்து இனங்களிடையேயும் காணப் படும் பல்வேறுவகைப்பட்ட நாட்டுப்புற கலை கள் தொடர்பான அறிவினை இந்த இசை விழா மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)







வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கொற்றாவத்தை பிரதேசப் பொறுப்பாளர் க.விஜியந்தன், மெதடிஸ்த போதகர் திருமதி டெய்சி தேவகுமார் ஆகியோர் நிற்பதையும் தரம் 1 இல் புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

# சுதுமலை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்-17.02.2011

## ஆலய குருவின் ஆசியுரை

இலங்கையின் வடபால் சுதுமலை கிராமத்தில் கலியுக தெய்வமாக எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீ சுப்பிர




மணிய பெருமானின் இரதோற்சவம் நடைபெறும் நன்நாளில் அவன் அடி பணிந்து வணங்குவோம். புவனேஸ்வரி அம்பாள் விஸ்வநாதப் பெருமான் அருகில் அழகுடன் அமர்ந்து அடியார்களின் அல்லல்களை அருள் விழியால் அழித்து சாந்தியுடன் வாழவைக்க சண்முகப்பெருமான் மாசி மாதத்தில் மங்களமாய் இரதமேறி பவனிவரும் நன்நாளில் நாமெல்லாம் மனம் மகிழ்ந்து அவன் திருவடி வணங்கி பிரார்த்திப்போம். சண்முகப் பெருமானின் இரதோற்சவம் இனிதே நிறைவுற அவன் அடி பணிந்து ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

**ஆலயகுரு.**

## சுதுமலையில் அருள் புரியும் சுந்தரத் திருமுருகன்

சுதுமலையிற் கோவில் கொண்டெழுந்து அருளாட்சி புரியும் முருகமூர்த்தியின் தேர்த்திருவிழா இன்றாகும். உலக



மாகியதேரை நால்வே தங்களாகிய புரவிகள் இழுக்க நான்முகனே தேர்ச்சாரதியாகி தேர் பவனி வருகிறது. வேதங்களும் ஆகமங்களும் வேதாந்த சித்தாந்தங்களும் காட்டிய வழியில் மனிதரிடத்தேயுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களாகிய அரக்கர்களை அழிக்கும் தத்துவ அடிப்படையில் தேர்த்திருவிழா அமைகின்றது.

மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் தூயவராகி, நமக்கென்று வாழாது பிறர்க்குரியவராகி எல்லோரும் இன்புற்று வாழப்பிரார்த்திப்போம்.

இன்றைய தினம் முருகப்பெருமானின் தேர்த்திருவிழாவைச் சிறப்பித்து வெளியிடப்படும் சிறப்புமலர் எல்லா வகையிலும் சிறப்புற வாழ்த்தி, உலகம் உய்ய உதித்த முருகனை வணங்கி என் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பண்டிதர்**
**க.ஈஸ்வரநாதபிள்ளை**
**சுதுமலை தெற்கு.**

**மலரமைப்பு:-**
**வி.கிரிதரன்**
**மானிப்பாய்**



## தேர்த்திருவிழா நிகழ்ச்சி நிரல்

*காலம்:-17.02.2011 (மாசிமாதம் 5ஆம் நாள் வியாழக்கிழமை)*
*அபிஷேகம்:- காலை 7.00மணி*
*வசந்தமண்டபப்பூசை:-காலை 8.00மணி*
*தேரில் ஆரோகணித்தல்:-காலை 10.00மணி*
*பச்சை சாத்துதல்:-மதியம் 12.00மணி*
*உற்சவகால குரு:-மகாதேவசோமசுந்தரக்குருக்கள்*
*தேர் உற்சவத்தின் போது அடியார்கள் வருகை தந்து முருகப்பெருமானின் திருவருளை பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.*

**பரிபாலன சபையினரும்**
**தேர்த்திருவிழா உபயகாரரும்.**

## இரதோற்சவம் காணவாரீர்

ஆலயங்களில் வருடா வருடம் நடைபெறும் மஹோற் சவத்திலே இரதோற்சவத்திலே பிரதோற்சவம் மிக உயர்வாகவும் சிறப்பாகவும் கூறப் படுகிறது.



மஹோற்சவ காலங்களில் எல்லா நாட்களிலும் ஆலயத்திற்கு செல்ல முடியாவிட்டாலும் இரதோற் சவத்தை தரிசித்தால் மஹோற் சவத்தை தரிசித்த பலன் கிடைக்கும் என்பது உறுதி. எல்லா உற்சவங்களிலும் முருகப் பெருமானின் திருவருள் பக்தர்களுக்கு மட்டும் தான் கிடைக்கிறது.

ஆனால் இரதோற் சவத்தில் யட் சகின்ரை இம்புருச சித்தி வித்யா தரதேவ மனுஷ்ய ரெல்லாருக் கும் தரிசனம் கிடைக்கிறது. பாவிகள், துரோகிகட்கு கூட தேர் உற் சவத்தன்று அனுக்கிரகம் கிடைக்கிறது. சுதுமலையில் வீற்றி ருந்து அருள்பாலிக்கும் முருகப் பெருமான் இரதோற்சவம் மக் கள் எல்லோருக்கும் நன்மை பயக்க முருகப் பெருமானை வேண்டுகிறேன்.

*சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்*

## அழகன் முருகனின் அருளைப் பெறுவோம்




சைவமும் தமிழும் தழைத்தோங்கி மிளிரும் இலங் கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண நக ரத்தின் சுதுமலை கிராமத்தில் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத் தில் அமர்ந்து எம்பெருமான் முருகன் அருள்பாலிக்கின்றான். தனது தந்தையாகிய சிவனையும் தாயாகிய சக்தியையும் தன் அருகில் தனித்தனித் கோவில்களாகக் கொண்டுள்ளமை இவ்வாலயத்திற்கு ஓர் சிறப்பாகும். ஏனெனில் மகோற்சவ காலங்களில் எம்பெருமான் முருகன் தனது தந் தையையும் தாயையும் பிரதட்சணம் செய்தே தன்னிடம் சேர்க்கிறார்.

ஆலயங்களில் நிகழும் மகோற்சவ நிகழ்வுகளில் "இரதோற்சவம்" எனப்படும் தேர்த் திருவிழா முக்கிய இடத்தைப் பெறுகிறது. அழித்தல் தொழிலின் கருவியாகவும் தத்துவமாகவும் அமைந்தது இரதமாகும். தேரானது அண்டத்தின் சின்னம். அதனை இயக்குபவன் ஆண்டவன். பூவுலகம் அண்டமாகிய தேரின் நடுத்தட்டு. இங்கு இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களை இரட்சிக்கின்றான்.

இத்தகைய ஒப்புயர்வற்ற தேர்த்திருவிழாவினை கண்டானந்தங்கொண்டு முருகப் பெருமானது அருட் கடாட்சம் பெற்று உய்யுமாறு ஆசி கூறி அமைகிறேன்.

**மகாதேவ சோமசுந்தரக்குருக்கள்**
**குருகுலம், இணுவில்.**

## பரிபாலன சபைத் தலைவரின் ஆசியுரை



யாழ்ப்பாண நன்னகரில் சுதுமலை எனும் கிராமத்தில் எங்கும் காணமுடியா அற்புதப் பொலிவோடு அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழாவானதேர் உற்சவம் இன்றைய நன்நாளாகும்.

பாரம்பரிய நெறிமுறை மாறாத வழிபாடு செய்யப்படுகின்ற புதுமை மிக்க இயற்கை எழில் சூழ்ந்த அழகுக்கந்தனின் தேர்த் திரு விழா வைத் தரிசிப்பதற்கு ஊர்கூடி வடம் பிடித்து ஒன்று கூடுவர். இந்நாளில் அனைவருக்கும் சகல செல்வங்களும் சௌ பாக்கியங்களும் கிடைக்க வேண்டுமெனவும் முருகப் பெருமானின் அருட்கடாட்சமும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**தலைவர்**
**ந.சிவசுப்பிரமணியம்**

## விரைந்து வாரீர் வடம் பிடிப்போம்

*அய்யன் முருகவேள் தேரேறி வருகிறான்*
*அடியார்தம் குறைதீர ஓடிடோடி வருகிறான்*
*வெய்ய பாவப்பிணி தீர்க்கவே வருகிறான்*
*வள்ளி தெய்வானையோடு வடிவேலன் வருகிறான்*
*உய்யவே தேரேறி உலக நாயகன் வருகிறான்*
*உவந்து அருள்புரிய உமைமகன் வருகிறான்*
*பொய்யகற்றி வாழ வைக்கவே வருகிறான்*
*மெய்யடியார் விரைந்து வாரீர் வடம் பிடிப்போம்*

**பண்டிதர்**
**க.ஈஸ்வரநாதபிள்ளை**


சுந்தர்சன்
பிரதான வீதி,
மானிப்பாய்.

ஸ்ரீ சுபா பேக்கரி
சுதுமலை

பரணி
கிறீம் கவுஸ்
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

கயானி
காலணியகம்
10, ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

Micro System
Development
Centre
Jaffna Road, Manipay.
T.P:-021 3218462
mob:-0772487082,0754985806
E-mail:-msdc-manipay@yahoo.com

LA
FANCY
Jaffna Road,
Manipay.

SELVA
COMMUNICATION
Tel:-021 7392990, 0773405951
Fax:-021 7392992
E-mail:-selvasuthumalai@gmail.com
No:-111,Thavady Manipay Road,
Suthumalai Center,
Manipay.

அம்பாள் களஞ்சியம்
அம்பாள் அரைக்கும் ஆலை
சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

மோட்டார் சைக்கிள், துவிச்சக் கரவண்டி, வாட்டர்பம், ஆட்டோ உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற்றுக்கொள்ள
ஜங்கரன்
மோட்டோர்ஸ்
சந்தை முன்பாக மானிப்பாய்.

Ankavan
Video & Photo
Indoor , Outdoor Photography
& Album Making
ALADY JUNCTION, MANIPAY
T.P:-0776685589
021225 5135

7 ஆம் திருவிழா
உபயகாரர்

அபிராமி
சவுண்ஸ்
கல்லூரி வீதி,
இளவாலை.

# இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## கிறிஸ்டோபர் வேரன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை மற்றும் உலக மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென சர்வதேச ஊடகவியலாளர் பேரவையின் முன்னாள் தலைவர் கிறிஸ்டோபர் வேரன் வலியுறுத்தியுள்ளார்.

எகிப்து மற்றும் துனிசியாவில் ஜனநாயக உரிமைகளுக்காக நடைபெற்ற கிளர்ச்சிகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர ஊடக அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அமரர் லசந்த விக்கிரமதுங்க நினைவுப் பேருரையில் கலந்து கொண்ட வேரன் ஜனநாயக உரிமைகள் பற்றி வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமை சுதந்திரத்திற்காக உலக சமூகம் ஆரம்பித்துள்ள கிளர்ச்சிகளாக எகிப்து மற்றும் துனிசியக் கிளர்ச்சிகள் கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற போர்வையில் மனித உரிமைகள் நசுக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்ற போர்வையில் ஜனநாயக உரிமைகள் முடக்கப்படக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியையும் மெச்ச முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகல சர்வாதிகார ஆட்சிகளும் பொருளாதார வளர்ச்சி என்ற சுவரை அண்மிக்கும் என்ற போதிலும் ஜனநாயக ஆட்சிகள் மட்டுமே அதனைக் கடந்து வெற்றியீட்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு தசாப்த காலமாக இலங்கையின் மனித உரிமைகள் பின்னோக்கிச் செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை ஊடகவியலாளர்கள் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகச் சோதிக்கப்பட்டு வருவதாகவும் சவால்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கான பதிவுகள்

## அடுத்த மாதம் முதல் அமுல்

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை அடுத்தமாதம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி திருமதி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் சுமார் 7 ஆயிரம் வாகனங்கள் இருந்தபோதிலும் தற்போது ஆயிரம் வாகனங்கள் மாத்திரமே தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இம்மாத இறுதிக்கு முன்னதாக பதிவுக் கட்டணத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் தமது வாகனங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அவர் வாகன உரிமையாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனம் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் அடிக்கடி கண்காணிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து அமெ.ஹவார்ட் பல்கலையில் விவாதம்

அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நேரடி விவாதக் கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம்திகதி காலை 9.30 மணி தொடக்கம் 11 மணிவரை இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹென கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்த பாலித ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக இருந்து இறுதிக்கட்டப்போரிலும் அதற்கு முன்னரும் தமது அரசாங்கம் மேற்கொண்ட பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களை நியாயப்படுத்தி வருகின்றார்.

சுவிஸ் அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கையிலும் இயங்கும் சுவீடனின் வெளிநாட்டு அபிவிருத்திக் கூட்டமைப்பு முகவர் ஆகிய அமைப்புக்களின் அனுசரணையுடன் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கிற்கு தமிழ்மக்கள் சார்பில் எவரும் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அண்மைக்காலமாகப் பலமாகக் குரல் கொடுத்து வரும் அனைத்துலக மன்னிப்புச்சபை, அனைத்துலக சர்ச்சைகள் குழு என்பனவற்றின் பிரதிநிதிகளான சாம் சரிபி, அலன் கீகன் மற்றும் த நியூயோர்க்கர் சார்பாக ஜொன்லீ அன்டெர்சன் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர். (ஸ்ரீ-2)

# பணத்திற்காக வேலை

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பணத்திற்காக வேலை என்ற வேலைவாய்ப்புத் திட்டமொன்றை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆரம்பித்துள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்புச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டதாக இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பமொன்றைச் சேர்ந்த ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூபாய் 500 என்ற அடிப்படையில் தொழில்வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இரண்டு மாத காலத்திற்கு இத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகத் தெரிகிறது.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் சேதமடைந்துள்ள உள்வீதிகள், கால்வாய்கள் மற்றும் குளங்கள் போன்றவற்றின் புனரமைப்புப் பணிகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுவதாகத் தெரிவித்துள்ள அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப இத்திட்டம் உறுதுணையாக அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி

இல்ல மெய்வல்லுநர் போட்டி–2011

காலம் :- 19.02.2011 (சனிக்கிழமை)
நேரம் :- பி.ப.1.30 மணி
இடம் :- கல்லூரி மைதானம்

தலைவர்
திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்கள்
(கல்லூரியின் முதல்வர்)

முதன்மை விருந்தினர்
கௌரவ அமைச்சர் திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள்
(பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர்)


சிறப்பு விருந்தினர்கள்
திரு.வி.சோமநாதனும் பாரியார் அவர்களும்
(பழைய மாணவர் சங்கச் செயலாளரும், முன்னாள் உதைபந்தாட்ட வீரரும்)
திரு. C. இராசநாயகமும் பாரியார் அவர்களும்
(கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், ஓய்வுபெற்ற கல்வி அதிகாரியும்)
திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள்
(கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகத்தினர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி,
உரும்பிராய்.


# அரசின் அநீதிகளுக்கு எதிராக மக்கள் முடிவெடுக்க வேண்டும்

## அர்ஜுன ரணதுங்க எம்.பி.தெரிவிப்பு



அரசாங்கத்தின் அநீதியான கொள்கைகளுக்கு எதிராக மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டுமென ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புக் கட்சியின்பிரதித்தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்கால தேர்தல்களில் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புப் போட்டியிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் தேர்தல்களை நடத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருட்களின் விலையைக் குறைப்பது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளான பேருந்து

## பெண்ணொருவர் பலி; பலர் காயம்

(கொழும்பு)

தனியார் பேருந்து பாதையை விட்டு விலகிச் சுமார் இருநூறு அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் உயிரிழந்ததோடு மேலும் இருபத்தைந்து பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் கொத்மலை கச்சாமலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புசல்லாவையிலிருந்து பெரட்டாசி நோக்கிச் சென்ற தனியார் பேருந்து வண்டியே இதன்போது விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் எஸ்.ஆரோக்கியமேரி (வயது 61) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த ஏனைய 25 பேர் சிகிச்சைக்காக புசல்லாவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் சாரதி உட்பட நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருந்ததையடுத்து அந்நால்வரும் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கம்பளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஆறு முன்பள்ளிச் சிறுவர்கள், வியாபாரிகள், வன இலாகா அதிகாரிகள் எனப்பலரும் அடங்குவதாகத் தெரிவிக்கும் புசல்லாவை பொலிசார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)



வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மங்கல விளக்கேற்றுவதனையும் அருகில் வேலணைப் பிரதேச மத்தியஸ்தர் சபை தவிசாளர் எஸ்.கே.சண்முகலிங்கம் நிற்பதையும் பிரதம விருந்தினர் தவிசாளருக்கு நியமனக் கடிதம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சவுதியில் சித்திரவதைக்குள்ளான மற்றொரு பணிப்பெண் மீட்பு

சவுதியில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணியாற்றிய இலங்கையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான பெண்ணொருவருக்கு அவர் பணியாற்றிய வீட்டின் உரிமையாளர் ஊசிக் கம்பிகளை உடலில் செலுத்தியுள்ளார். பெண்ணின் இரண்டு கைகளில்4 ஊசிக் கம்பிகள் செலுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் நாடுதிரும்பியுள்ள குறித்த பெண் நேற்று முன் தினம் சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்மிமன பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான கே.ஜி.மல்காந்தி என்ற பெண்ணே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் நவம்பர் 18 ஆம்திகதி சவுதி அரே பியாவுக்கு சென்றுள்ளார். சவுதிக்குச் சென்று 4 நாட்களின் பின்னர் வீடொன்றில் பணிக்கு அமர்த்தியுள்ளனர்.

சில தினங்களின் பின்னர் பெண்ணை வீட்டின் உரிமையாளர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்துள்ளார். இதற்கு மல்காந்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதனால் கை, கால்களைக் கட்டி வீட்டின் உரிமையாளர் அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார். அத்துடன் 4 ஊசிக் கம்பிகளை கைகளுக்குள் செலுத்தியுள்ளார்.

இதன் பின்னர் தான் மயக்கமடைந்ததாகவும் மயக்கம் தெளிந்த பின்னர் இந்தச் சம்பவம் குறித்து இலங்கைக்கு தெரியப்படுத்த வேண்டாம் என வீட்டின் உரிமையாளர் தன்னை அச்சுறுத்தியதாகவும் மல்காந்தி குறிப்பிட்டுள்ளார். இதன் பின்னர் தான் தனது கணவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தான் பணியாற்றும் வீட்டின் உரிமையாளர் தன்னை சித்திரவதை செய்வது குறித்தும் தன்னை எப்படியாவது இலங்கைக்கு வர வழைக்குமாறு கூறியதாகவும் இதனையடுத்து கடந்த 13 ஆம் திகதி தாம் இலங்கை திரும்பியதாகவும் மல்காந்தி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பாதாள உலக தாதா மீது நீதிமன்றில் தாக்குதல்

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலை வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருக்கும் பாதாள உலக தாதா பொட்ட நௌபர் நேற்று கொழும்பு பிரதான நீதிமன்ற வளாகத்தில் வைத்து விளக்கமறியல் கைதிகள் சிலரால் தாக்கப்பட்டு உள்ளார்.

நௌபர் குற்றவியல் வழக்கு ஒன்றில் சாட்சியம் வழங்குவதற்காக அழைத்து வரப்பட்டு இருந்த போது கைதிகள் சிலர் கைவிலங்குகளால் இவரைத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் நீதிமன்றத்தின் நேரடிக் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## வெள்ள நிவாரணம் வழங்குவதைக் காட்டிலும் தேர்தல் பணிகளிலேயே அரசு ஆர்வம்

### சஜித் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் சகல மக்களுமே மூன்று வேளையும் உணவு உட்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி ஏனையவர்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு தேர்தலிலும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் மக்களின் ஆணையைக் கோருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் கடந்தகால தேர்தல் வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதனை விடவும் அரசாங்கம் தேர்தல் பணிகளில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மெய்வல்லுநர் போட்டி

அல்வாய் சிறீலங்கா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர் வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.செலவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி பணிப்பாளர் பா.இரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-29)

## சர்வதேச கிரிக்கெட் சூதாட்டக்காரர்களை கட்டுப்படுத்த விமான நிலையத்தில் தனிப்பிரிவு

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடும் வீரர்களை முன்கூடிய வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் சூதாட்டத்தில் ஈடுபடுத்தும் நோக்கில் சர்வதேச சூதாட்ட காரர்கள் இலங்கைக்கு வருவதாக கிடைத்துள்ள தகவல்களை அடுத்து அரச புலனாய்வுப் பிரிவினர் அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சர்வதேச சூதாட்டக்கரர்களை கைது செய்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தனியான பொலிஸ் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சூதாட்டக்காரர்கள் தங்க உள்ளதாக கூறப்படும் கொழும்பில் உள்ள பிரதான நட்சத்திர விடுதிகளில் சாதாரண உடைகளில் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தகவல்கள் கூறுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்தே இந்த கிரிக்கெட் சூதாட்டகார்கள் இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிய வருகிறது. பணத்திற்காக போட்டிகளின் வெற்றி, தோல்விகளை நிர்ணயித்ததாக கடந்த காலங்களில் பல கிரிக்கெட் வீரர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## யானைகள் தொடர்பிலான நாடு தழுவிய கணக்கெடுப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் யானைகள் தொடர்பான நாடு தழுவிய கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஏற்படும் மோதல்களை தவிர்க்கும் நோக்கில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இதற்கு முன்னர் யானைகள் தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போதிலும் முதல் தடவையாக நாடு தழுவிய ரீதியில் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அண்மையில் வடக்கு, கிழக்கு மற்றும் வட கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக யானைகளுக்கு அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்திய மற்றும் அமெரிக்க வன வள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்த கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் சுமார் ஆறாயிரம் யானைகள் இருக்கக் கூடும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## விடுதலையான புலி உறுப்பினர் மட்டக்களப்பில் வைத்து கைது

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்டு திருமணம் செய்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலை புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக படுகான்வரை பகுதியில் விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டு வருவதாக பிரதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இது தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகளை மேற்கொள்ள அச்சம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் குறித்த தகவல்களை பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் திரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சங்கரபுரம் பகுதியில் தங்கி இருந்த 37 வயதுடைய செல்வராஜா குணசேகரம் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகளிடம் இருந்து விலகி பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கடற்கொள்ளையர் குறித்து விழிப்பாக இருக்குமாறு மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

சோமாலிய கடற்கொள்ளையர்கள் குறித்து இலங்கை மீனவர்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என மீன்பிடி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மீனவர்கள் ஐவரைக் கடலில் வைத்து அண்மையில் சோமாலிய கடற்கொள்ளையர்கள் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையிலேயே அமைச்சால் இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடல் வலயத்தில் 200 கடல் மைல் எல்லைக்குள் நின்று கடல் தொழிலைச் செய்ய வேண்டும் என்று அமைச்சு அறிவுறுத்தி உள்ளது. (ஸ்ரீ-2)





தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந் திரன் ஆகியோர் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை படங்களில் காணலாம்.

# புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நீக்கக் கோரி விரைவில் வழக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீது ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டிருக் கும் தடையை நீக்க வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணிகளில் ஒருவரான விக்டர் கோப் இதற்கான முன்னெடுப்புகளை மேற் கொண்டு வருகின்றார்.

புலிகள் இயக்கம் மீது 1996 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது. கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் விதித்த தடையைத் தொடர்ந்தே ஐரோப்பிய ஒன்றி யத்தினால் தடை விதிக்கப்பட்டது.

ஆனால், புலிகள் இயக்கத்தை ஏன் பயங் கரவாத இயக்கமாகக் கொள்ள முடியாது ? புலி கள் இயக்கம் மீது ஏன் தடை போடக் கூடாது? என்பதற்கு மிகவும் காத்திரமான வாதங்கள் உண்டு என்கிறார் சட்டத்தரணி கோப் .

ஐரோப்பிய ஒன்றியம் முன்பு ஒரு போதும் செவிமடுத்திராத வாதங்கள் அவர் வசம் இருக் கின்றன என்கின்றார்.

புலிகள் தமிழ் மக்களின் அடிப்படை உரி மைகளுக்காகப் போராடியவர்கள். தமிழர்க ளுக்கு அடிப்படை உரிமைகள் உண்டு என் பதை ஐ.நா. சாசனம் உட்பட சர்வதேச பிரக டனங்கள், சட்டங்கள் போன்றவற்றால் மறுக்க முடியாது என்பதே சட்டத்தரணி கோப் பின் அழுத்தமான நிலைப்பாடு ஆகும்.

(ஸ்ரீ-2)

# செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆரம்பப்பிரிவு தரம் 1 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரி யர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் அமைந் துள்ள ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர் கள் தரம் 1 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை எடுத்து வருமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப் பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-3-19)

# இறுதிக்கட்ட யுத்தத்தில் தப்பிய வான்புலிகள் தமிழ்நாட்டில்

## சிங்கள ஊடகம் தகவல்

இராணுவத்தினருடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வான்புலிகளும் தப்பித்துச் சென்றுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தப்பிச் சென்ற ஏனைய புலி உறுப்பினர்கள் போன்று அவர்களில் சிலரும் தமிழ்நாட்டில் தஞ்சமடைந் திருப்பதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கைப் புலனாய்வுத் துறையினரை மேற்கோள்காட்டி அ ந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தமிழ்நாட்டில் புதிதாக ஒருங்கிணையும் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கடந்த டிசம்பர் மாதக் கடைசியில் தேவையான பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

அவர்கள் கேரளாவிலும் ஆயுதப் பயிற்சி யைப் பெற்றுள்ளதுடன் அது தொடர்பான குறும்படமொன்யையும் தயாரித்துள்ளமை குறித்து இந்திய உள்ளக பாதுகாப்பு அமைச் சுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவில் விடுதலைப் புலிகளின் மீள் ஒருங்கிணைப்பு மற்றும் ஆயுதப் பயிற்சிகள் தொடர்பான பல திடுக்கிடும் தகவல் இலங்கை இராணுத்திரால் கைது செய்யப்பட்டுள்ள முக் கிய புலி உறுப்பினர் ஒருவரிடமிருந்து கிடைக் கப் பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள் ளது.

(ஸ்ரீ)

# பல்கலை அனுமதிக்கு ஆங்கில பாட சித்தி கட்டாயமாக்கப்பட்டமை அநீதியானது

## இலங்கை ஆசிரியர்கள் சேவைகள் சங்கம் தெரிவிப்பு

பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெறுவ தற்கு ஆங்கில பாடத்தில் சித்தியடைவது கட்டா யம் என்ற தீர்மானம் இலவச கல்வியை பெறு வதற்கான மாணவர்களின் உரிமைக்கு பாரிய சவாலாகும் என இலங்கை ஆசிரியர் கள் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல பாடசாலைகளில் ஆங்கிலத்தை கற்பிப் பதில் பெரும் எண்ணிக்கையிலான பிரச்சினை கள் உள்ளன. இந்நிலையில் இத்தீர்மானம் மிகவும் பாரபட்சமான மாணவர் களுக்கு அநீ தியிழைக்கும் தீர்மானம் என நாம் நம்புகி றோம் என மேற்படி சங்கத்தின் பொதுச் செய லாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

ஆங்கிலம் கற்பிப்பதற்கு வசதிகள் பற்றா குறையாக உள்ளதால் கிராமிய பாடசாலை கள் பல மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன என் பதை நிராகரிக்க முடியாது. இத்தீர்மானம் ஆயி ரக்கணக்கான மாணவர்கள் தமது உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பை இழப் பதற்கு வழிவகுக்கும்.

ஆங்கிலம் கற்பது மிக முக்கியமானது. எனினும் ஆங்கிலத்தில் திறமையில்லாத தால் மாத்திரம் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பை தடுப்பது நியாயமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ)

# அநுரா பண்டாரநாயக்கவின் உயில் தொடர்பான சர்ச்சை நீடிப்பு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கவின் உயில் தொடர்பான சர்ச்சை நீடித்து வருதாகக் குறிப் பிடப்படுகிறது.பண்டாரநாயக்க குடும்பத்திற்கு சொந்தச் சொத்துக்களை பங்கீடு செய்வதில் இந்தத் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

அமரர் அநுரா பண்டாரநாயக்கவின் சகோ தரிகளான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் சுனேத்திரா பண்டார நாயக்க ஆகியோர் சொத்துக்களுக்கு உரிமை கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய் துள்ளனர்.

எனினும், குறித்த சொத்துக்களுக்கு வேறும் சில நபர்களும் உரிமை கோரியுள் ளனர். அநுரா பண்டாரநாயக்கவின் உயிலின் அடிப்படையில் சொத்துக்களுக்கு உரிமை இருப்பதாக வசந்த சமரசேகர என்ற நபர் நீதி மன்றில் சாட்சியமளித்துள்ளார்.

அநுரா பண்டாரநாயக்கவின் சொத்துக் களுக்காக எழுதப்பட்ட உயில் உரிய நேரத்தில் கோரப்படவில்லை என பண்டார நாயக்க சகோ தரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க குடும் பத்தின் குடும்ப சட்டத்தரணி நீலகாந்தனிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப் படுகிறது.

(ஸ்ரீ-2)



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற கால்கோள் விழாவின் போது தரம் 1 இல் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் விருந்தினர் களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# கொழும்பு வான்பரப்பில் தூசுப்படலம் அதிகரிப்பு

## சுற்றாடல் வள அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரின் வான் பரப்பில் காணப் படுகின்ற தூசுப்படலத்தின் அளவு அதிகரித் துள்ளதாக சுற்றாடல் வள அமைச்சு தெரிவித் துள்ளது. அமைச்சினால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட வளி ண்டலவியல் ஆராய்ச்சி யின் போது இந்த விடயம் தெரியவந்துள் ளது.

கடந்த 2009ஆம் ஆண்டில் கொழும்பு நகரில் நூறுக்கு 60 மைக்ரோகிராம் என்ற விகிதத்தில் காணப்பட்ட தூசுப் படலத்தின் அளவு தற்போது 62மைக்ரோகிராம் வரை யில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து கொழும்பு நோக்கி வருகின்ற வாகனங்களி னால் இந்தத் தூசுப்படலம் அதிகரித்துக் காணப் படுவதாக சுற்றாடல்வள அமைச்சின் அதி காரி கள் தெரிவித்துள்ளன. அத்துடன் நகரில் மேற் கொள்ளப்படுகின்ற கட்டட நிர்மாணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையும் இதற் கான ஒரு காரணம் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

(ஸ்ரீ-9)

# கள்ளிக்காட்டு இதிகாசம் 42





கவிப்பேரரசு வைரமுத்து

வீடுதேடி வந்த பேயத்தேவரைப் பார்த்து "யாரு பெரிய தேவரு மகனா"என்று ஆச்சரியப்பட்ட வெள்ளையன் "முடிவெட்டணுமா" என்றார்.

"இல்ல... மீச ஒதுக்கணும்!"

நாலரை அடி மஞ்சுவர் வைத்துக் கோரைப்புல்லால் வேய்ந்த குடிசையின் தென்னங்கிடுகு விரித்த திண்ணையில் முக்காலிப் பலகை எடுத்துப் போட்டு 'உட்காரப்பா' என்றார் வெள்ளையன்.

வேட்டியை உருட்டித் திரட்டிக் கட்டிக் கொண்டு தோள் துண்டை மடியில் போட்டுக்கொண்டு வெறச்சு வெடப்பா ஒக்காந்தாரு பேயத்தேவர். வாலிப ஒடம்பு; நல்ல பிறவிக்கட்டு. எண்ணெய் போட்டுப் போட்டுக் கருத்துப் பளபளக்கிற சாமி சிலை மாதிரி உருண்டு தெரண்டு பளபளத்து நிக்குது தோளும் மார்பும். மூஞ்சியிலிருந்த பூனமயிர் நிறம் மாறி இப்பத்தான் கறுப்புக்குக் கட்சி மாறுது.

தகரப் பெட்டியெடுத்துத் தன் ஆயுத சாலை திறந்தார் வெள்ளையன். அவருக்குக் கலை-தொழில்-சம்பாத்தியம் சாப்பாடு-தெய்வம்-வேலைக்காரன்-இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் எல்லாமே அந்தத் தகரப்பெட்டிதான்.

.உள்ள ஒரு கத்திரி. ரெண்டே முக்கா ரூவா சொல்லி- பேரம்பேசி-ரெண்டே கால் ரூபாய்க்கு வாங்குனது. தேய்காயெண்ண போட்ட எடமெல்லம் கறுப்பா, சாணபுடிச்ச எடம் மட்டும் வெள்ளையா அது ரெண்டு கலர் காட்டும். மத்தவங்களுக்கெல்லாம் கத்திரிக் கோல்ங்கிறது ஒரு ஆயுதம்; வெள்ளையனுக்கு அது வாத்தியம், முடிவெட்டுறபோது அது போடுற 'கிறீச்! கிறீச்!' சத்தம்தான் அவருக்குச் சங்கீதம். அந்தக் கிறீச்! கிறீச்!' வெள்ளையன் காதில் மட்டும் 'சசசச ரிரிரிரி மமமா' என்று கரஞ்சொல்லும்.

கத்திரிக்கோலுக்கு அடுத்து ஒரு கத்தி, தகட்டுல அடிச்சு அரளிக் குச்சியில சொருகின குச்சிப்புடிக் கத்தி. அத மடக்க முடியாது. வேல முடுஞ்சவுடன குச்சி தனியாப் போயிரும்; கத்தி உறைக்குள்ள போயிரும். அந்தக் கத்திக்கொரு தீட்டுக்கல்லு. கறுப்புல சாம்பப் பொடச்ச மாவுக்கல்லு. மருதைக்குப் போன ஆள்கிட்டச் சொல்லிவுட்டு அலைஞ்சு திரிஞ்சு வாங்கியாந்து பதினஞ்சு நாள் தண்ணியில ஊறப்போட்டு ஒருவாரம் தேங்காயெண்ணெயில முக்கிப் பதப்படுத்தின கல்லு. நாலு இழு இழுத்தாப் போதும்; சும்மா கத்தி பொறி பறக்கும்.

அப்பறம் ஒரு பட்ட வாரு; மாட்டுத்தோல்ல செஞ்சது. தீட்டுக்கல்லத் தீட்டுன கத்திய சாந்தப் படுத்த அதுல ரெண்டு இழு இழுத்துக்கிரலாம்.

ஒரே ஒரு கண்ணாடி. சட்டமில்லாத வெறுங் கண்ணாடி அதுல சட்டம் போகுமுன்ன ரசம் போச்சா ரசம் போகுமுன்ன சட்டம் போச்சான்னு கேட்டா, பதில் சொல்ல வேண்டிய அளு உசுரோட இல்ல. அது வெள்ளையனுக்கு அவுக அப்பன் "பத்திரம் மகனே! பரம்பரச் சொத்து"ன்னு குடுத்துட்டுப் போனது.

அப்பறம் ஒரே ஒரு முள்ளு வாங்கி, தண்ணி ஊத்த ஒரே ஒரு கிண்ணி. இந்தச் சரக்குகள வச்சுக்கிட்டுத்தான் வெள்ளையன் எப்பேர்ப்பட்ட ஆளுகளையும் குனின்னு குனியவைக்கிறது.

வெள்ளையன் நல்ல செவப்பு. அம்பது இருக்கும் வயசு. காதோரம் பத்துப் பதினஞ்சத் தவிர முன்னப்பின்ன ஒரு முடியும் நரைக்கல.

ஊர் மத்தியில சாலிமரத்துக்குக் கீழ பொதுவுல உக்காந்து தொழில் செய்யறது- கூப்பிட்டுவிட்டா வீடுகளுக்கே போயி முடிவெட்டிட்டு வாரது-இந்த ரெண்டையும் தவிர, தன் வீட்டுக்கே வந்து முடிவெட்டிட்டுப் போறதுதான் வெள்ளையனுக்கு ரொம்பப் புடிக்கும். தன் தொழிலுக்கு அதான் மதிப்புங்கறது அவர் நெனப்பு.

வெள்ளையன் பொண்டாட்டி மாரியம்மாதான் கள்ளிப் பட்டிக்கே மருந்துவம் பாக்குற மருத்துவச்சி. கைராசிக் காரின்னு பேரு. அன்னைக்குஅவ வீட்ல இல்ல.



குது மனசு.

மயில் கழுத்து நெறத்துல ஒரு பாவாட கட்டி செவப்பு லவுக்கையும் பச்சைத் தாவணியுமா ஒருத்தி கண்ணாடிக் குள்ள மொழுக்குன்னு விழுந்து 'கழுக்'குன்னு காணாப் போறா.

கண்ணாடி உருவம் போயிருச்சு. ஒரு கைமட்டும் வருது சொம்புல கொண்டுவந்த தண்ணியக் கிண்ணியில ஊத்துது. அவ முழு உடம்பும் பேயத்தேவர் முதுகுப்குப் பின்னால இருக்கு; கை மட்டும் முன்னால இருக்கு.

யாத்தே!இது என்ன கையா? மஞ்சக் குளிச்ச தங்கமா? சிவப்பு வளவியும் பச்ச நரம்பும் அதுல படிஞ்சும் படியாமத் துருத்தி நிக்கிற பூன முடியும்; அவ பதமாக் குனிஞ்சு தண்ணி ஊத்துன பாவனையில் தெரிஞ்ச நல்ல குணமும், அவ பொசுக்குன்னு போனபோது மூஞ்சில வீழுந்துபோன தாவணித் தலைப்பும் நின்டது நிக்க- தொறந்த கண்ணு மூடுறதுக்குள்ள கிறுக்குப் புடிக்க வச்சிருச்சு பேயத்தேவரை.

இப்பக் கண்ணாடியச் செவக்கிப் புடிச்சா அவ போற பின்பக்க அழகு தெரியுது. திட்டுத்திட்டா. ஒத்தச்சட போட்டுப் போகுதய்யா செழிச்சு வளந்த செவ்வாழக்கன்னு.

"வெள்ளையா! கெடா மீச வக்கணும்."

"இப்பத்தான் மொளச்சு மூணு எல விட்ருக்கு. அதுக்குள்ள கெடா மீச கேட்டா எப்படி?"

"முதல்ல மொளச்சதுக்கு வேலி கட்டப்பா. மீச அப்பறம் வெள்ளாமக் காடு கணக்கா வெளஞ்சுட்டுப் போகுது."

"பெரிய தேவரு மகனுக்குப் பேசவா சொல்லிக் குடுக்கணும்..." ரசம் போன கண்ணாடியை எடுத்துப் பேயத்தேவர் கையில் கொடுத்துவிட்டு உறையில் இருந்த கத்தியை எடுத்து அரளிக் குச்சியில் செருக்கித் தீட்டுக் கல்லில் வைத்துத் தீட்டிக் கொண்டே "யம்மா! முருகாயி... கிண்ணிக்குத் தண்ணி கொண்டுவந்து ஊத்தம்மா" என்று குரல் கொடுத்துவிட்டுத் தீட்டிய கத்தியை வாரில் நாலு இழு இழுத்தார் வெள்ளையன்.

அங்கதானய்யா ஆரம்பமாச்சு பேயத்தேவன் மனசச் சுத்திச் சுழட்டியடிச்ச சூறாவளி.

பேயத்தேவரின் முதுகுக்குப் பின்னால் மூன்று விதமான சத்தம்.

'சல் சல்' சல்ன்னு ஒரு கொலுசுச் சத்தம்.

'க்ளிங் க்ளிங்'ன்னு ஒரு வளவிச் சத்தம்.

'சரக் சரக் சரக்'ன்னு பாவாடச் சத்தம்.

இதென்னடா இது! இந்த வீட்டுக்குள்ள இப்படி ஒரு சத்தம்!

மனசு நாலா பக்கமும் திரும்புது; முதுகத் திருப்ப முடியல.

கையில புடிச்சிருந்த கண்ணாடியில ரசம்போன பாகம் போக மிச்ச எடத்துலயெல்லாம் திட்டுத் திட்டா ஒரு அழகான கொமரிப் பொண்ணோட மூஞ்சி தெரியுது.

என்னமோ ஒரு மின்னல்வந்து சுளீர்னு ஒரு சுண்டு சுண்டுது முதுகுத் தண்டுல. சீமந்தண்ணி சீசாவுல தீக்குச்சி கொளுத்திப்போட்ட மாதிரி 'பக்'குன்னு பத்திப் பட்..பட்.. படீர்னு வெடிக்

அய்யோ! இந்தக் கிண்ணி செம்பா இருந்திருக்கக் கூடாதா? இது நெறையும் வரைக்கும் இன்னும் கொஞ்ச நேரம் நின்னிருந்திருப்பாளே!

கிண்ணித் தண்ணியத் தொட்டுத் தாடையில தடவுனார் வெள்ளையன். மூஞ்சியில தொட்டுவச்ச தண்ணி மனசுக்குள்ள எறங்கி மசமசன்னு கசிஞ்சது.

"சின்னத்தேவரே!

குனியா...

நிமிருய்யா...

அண்ணாந்து பாருய்யா...

ஒதட்ட மடிச்சுக் குடுய்யா...

தலைய ஆட்டாதய்யா...

தும்மல் வந்தாச் சொல்லுய்யா...!"

-வெள்ளையன் போட்ட எந்த உத்தரவும் பேயத்தேவரோட செவி சேரல. வெட்டுக்குத் தலயக் குடுத்த ஆடு மாதிரியே அப்படியே உக்காந்திருக்காரு. சத்தத்துக்குப் பின்னாலயே குடிசைக்குள்ள போன மனசு 'வா'ன்னாலும் வரல.



கிண்ணிக்கு ஒரு தண்ணிதான் ஊத்துவாளா? இன்னொரு தண்ணி ஊத்த வரமாட்டாளா? படக்கு படக்குன்னு அடிக்குது மனசு.


காஞ்சுபோன தாடையில இன்னொரு தடவை தண்ணி தடவி, தீட்டுக்கல்லில் தீட்டி வாரில் பதம் பார்த்தது போக கத்திய உள்ளங்கையிலவேற வச்சு அங்கிட்டும் இங்கிட்டும் இழுகிப் பேயத்தேவர் முகத்தை இடப்பக்கம் திருப்பி வலதுகன்னத்தில் கத்திவச்சு, சரட் சரட்டுன்னு வழிச்சு பின்னர் அடித் தாடையில கத்தி போட ஆரம்பிச்சார் வெள்ளையன்.

கண்ணாடி எடுத்து அங்கிட்டும் இங்கிட்டும் ஆட்டி ஆட்டிப் பாத்தாரு பேயத்தேவரு. கண்ணாடியில அவர் மூஞ்சிதான் விழுகுதே தவிர அவ மூஞ்சியக் காணோம். (வளரும்)

## நாடு கடந்த தமிழீழ அரசு

# தென் சூடான் போன்ற நிலைமையை இலங்கையில் ஏற்படுத்த முயற்சி !



நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை அமைத்ததன் மூலம் ருத்ரா தனது நிலையைப் பலப்படுத்திக் கொண்டுள்ளார். அத்தோடு ஐக்கிய நாடுகள் அமைப்பில் புதிதாக இணையவுள்ள தென்சூடானின் அங்கிகாரத்தையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பெற்றுள்ளது என ஐலண்ட் நாளேட்டின் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுக்களின் போது, கூட்டாட்சித் தீர்வு தொடர்பாக அதிகாரபூர்வமற்ற பேச்சு இரண்டு தரப்பு ஆலோசகர்களுக்கு மத்தியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, சூடான் விவகாரத்தை ருத்ரகுமாரன் மேற்கோள் காட்டினார். தென் சூடான் பிரிந்து செல்வதைப் பயன்படுத்துவதன் மூலம் சிறிலங்காவிலும் ஐ.நா தலையீடு ஒன்றினை மேற்கொள்வதற்கான நீண்ட கால மூலோபாயத்திட்டம் ருத்ரகுமாரனிடம் இருப்பதாக புலனாய்வுத் தகவல்களிலிருந்து தற்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு ஐலண்ட் நாளேட்டில் Rudrakumaran emerges as Diaspora leader என்ற தலைப்பில் சர்மின்ட்ரா பெர்டினான்டோ எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தென்சூடான் தனி நாட்டிற்கு வழி அமைத்த ஐ.நா தலைமையிலான வாக்கெடுப்பிற்கு ஒத்த வகையில் அனைத்துலகத் தலையீட்டுக்கு அவசியமான நிபந்தனைகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்படுத்தும் என்பதை ருத்ரா வலியுறுத்தி வருகின்றார். அமெரிக்காவைத் தளமாகக் கொண்டுள்ள விஸ்வநாதன் ருத்ரகுமாரன் புலம்பெயர் தமிழர்களின் தலைவராக உருவாகியுள்ளார். ஐக்கிய நாடுகள் அவை தலைமையில் தென் சூடான் சுகந்திரத்திற்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட்டதைப்போல, சிறிலங்காவிலும் தமிழர்கள் பிரிந்து செல்லும் வாக்கெடுப்பை நடாத்துமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக உறவுகளுக்கான பொறுப்பாளரான கே.பி மலேசியாவில் கைது செய்யப்பட்டு, கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டதை அடுத்து, பல்வேறு புலம்பெயர் அமைப்புகள் புலிகளின் தலைமையைக் கைப்பற்றுவதற்கு முயன்றன. 'ருத்ரா' அனைத்து எதிர்ப்புகளை முறியடிப்பதில் வெற்றி கண்டுள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை அமைத்ததன் மூலம் ருத்ரா தனது நிலையை பலப்படுத்திக் கொண்டுள்ளார். அத்தோடு ஐக்கிய நாடுகள் அமைப்பில் புதிதாக இணையவுள்ள தென் சூடானின் அங்கிகாரத்தையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பெற்றுள்ளது.

இனத்துவ அடிப்படையில் நாட்டைப் பிரிப்பதற்கு, சூடானை ஒத்த வாக்கெடுப்பினை ஏற்படுத்துவதற்குரிய அழுத்தத்தினை சிறிலங்காவிற்கு கொடுப்பதற்குரிய நகர்வுகளை ஐ.நா மூலம் மேற்கொள்வது பற்றி விடுதலைப் புலிகளின் போருக்கு ஆதரவளித்த சில உதவி நிறுவனங்கள் எடுத்துரைத்துள்ளன.

2003இல் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் தலைமையில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது, சூடானை ருத்ரா மேற்கோள் காட்டியதாக சிறிலங்காவின் சமாதானச் செயலக முன்னாள் பிரதிநிதி ஜோன் குணரட்ண கூறியுள்ளார்.

தென் சூடான் நிலைமைகளுக்கும் வடக்கு கிழக்கின் சில பிரதேசங்களை விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த 'மே 2009' இற்கு முன்னான காலப்பகுதிக்குமிடையில் மேலெழுந்த வாரியான ஒற்றுமைகளைக் காண முடியும் என சண்டே ஐலண்ட் இதழின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

'ஒரு சிறுபான்மைத் தேசிய இனக் குழுமம், பெரும்பான்மை இனத்தோடு முரண்பாட்டைக் கொண்டுள்ளது. தனி நாட்டை அமைப்பதற்கான போரை நடத்தியது என்ற அடிப்படையில் ஒற்றுமைகளைக் காணலாம். ஆனால் அவற்றைத் தவிர வேறு விடயங்களில் இந்த ஒப்பீடு பொருத்தமற்றது. ஏனெனில் இரண்டு முரண்பாடுகளினதும் வரலாறு முற்றிலும் மாறுபட்டது. ஆனபோதும் 2002 - 2003 காலகட்டப் பேச்சுவார்த்தைகளில் தாம் எதனைக் கோருகிறோம் என்பதில் விடுதலைப் புலிகள் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருந்தனர்' என்கிறார் குணரட்ண.

2003 ஜப்பானில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் விவாதிக்கப்பட்ட விவகாரங்களில் ஒன்று, சிறிலங்காவிற்கான கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal constiutional structure for Sri Lanka) ஆகும். உண்மையில் சிறிலங்கா அரசாங்கத்தரப்பில், 'ஒன்றுபட்ட சிறிலங்காவிற்குள் உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான கூட்டாட்சித் தீர்வினை ஆராய்தல்' என்ற தலைப்புடன் மிக நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்ட வரைபு ஒன்று கையளிக்கப்பட்டது. அதில் கூட்டாட்சி அமைப்பின் அடிப்படை விடயங்களுடன் கொள்கை சார்ந்த 16 விவகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததோடு, பேச்சுவார்த்தைக்கான அடிப்படை வரைபாகவும் அது உருவாக்கப்பட்டிருந்தது.

கூட்டாட்சித் தீர்வு தொடர்பான முன்வைப்பினை ஏற்றுக்கொள்கின்ற அதிகாரம் அந்த நேரத்தில் தன்னிடம் இல்லை என்பதான பதில் அன்ரன் பாலசிங்கத்திடமிருந்து வெளிப்பட்டது. இது பற்றி முதலில் அரசியல் விவகாரங்களைக் கையாள்வதற்கென உருவாக்கப்பட்ட அரசியல் விவகாரக் குழுவுடன் விவாதிக்கப்பட வேண்டும் என்று பாலசிங்கம் தெரிவித்தார்

இந்த விவகாரம் பற்றிய அதிகாரபூர்வமற்ற பேச்சு, இரண்டு தரப்பு ஆலோசகர்களுக்கும் மத்தியில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, சூடான் விவகாரத்தை ருத்ரகுமாரன் மேற்கோள் காட்டியது எனது நினைவுக்கு வருகிறது. என்ன வகையான பொருத்தமற்ற ஆலோசனை இது என்பதாக இருந்தது அந்த நேரத்தில் அங்கிருந்தவர்களின் வெளிப்பாடு.

இந்த ருத்ரகுமாரன் முட்டாள் அல்ல என்பது காலம் கடந்த ஞானமாக எனது சிந்தனையில் தோன்றியது. அவர் திறமையானவர். இப்போது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைமை அமைச்சராகியுள்ளார்.

தென் சூடான் பிரிந்து செல்வதைப் பயன்படுத்துவதன் மூலம் சிறிலங்காவிலும் ஐ.நா ஊடாக அவ்வாறான நகர்வினை ஏற்படுத்துவதற்கான நீண்ட கால மூலோபாயத்திட்டம் ருத்ரகுமாரனிடம் இருப்பதாக புலனாய்வுத் தகவல்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தனது மூலோபாயத்தின் ஒரு பகுதியாக கே.பியைப் பயன்படுத்தி ருத்ரவை செயலிழக்க வைக்கும் நோக்குடன் புலம்பெயர் தமிழர்களை அணுகுகிறது.அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு வகைப் புரிந்துணர்வை ஏற்படுத்துவதும், இராணுவ வழிமுறை மூலம் சமாதானம் என்பதை வலியுறுத்தி வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பலப்படுத்த உதவுமென்பது சிறிலங்கா அரசாங்கத்தின் மூலோபாயமாக உள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நலவாழ்வுத் திட்டங்களை மேற்கொள்வதற்குரிய முழு ஆதரவினை கே.பியின் வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்திற்கு (NERDO) அரசாங்கம் வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

வன்னியில் சிறிலங்கா படையினரின் தாக்குதல்களை நிறுத்துவதற்கான இறுதிநேர முயற்சிகளில் ருத்ராவுடன் கே.பி அதீதமாக ஈடுபட்டிருந்தமை ஒன்றும் இரகசியம் அல்ல. 2009 ஓகஸ்டில் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட கே.பி, அரசாங்கத்திற்கு ஒத்துளைப்பு வழங்கத் தொடங்கியதை அடுத்து, புலம்பெயர் தமிழர்களை வழிநடத்தும் போட்டியில் ருத்ராவின் கைகள் ஓங்கத் தொடங்கியுள்ளதாகவே நம்பப்படுகிறது.

மே 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் மரபுவழி படைப்பலத்தை இழந்திருக்கின்ற நிலையிலும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத் திட்டம் ஈழத்திற்கான பாதைகளைத் திறக்கும் என புலம்பெயர் தமிழர்களுக்கு ருத்ரா உறுதியளித்துள்ளார்.

தென் சூடான் தனி நாட்டிற்கு வழி அமைத்த ஐ.நா தலைமையிலான வாக்கெடுப்பிற்கு ஒத்தவகையில் அனைத்துலக தலையீட்டிற்கு அவசியமான நிபந்தனைகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஏற்படுத்தும் என ருத்ரா வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் அடிப்படையில் தென் சூடான் விடுதலை அமைப்புடன் ருத்ரா தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறார் என புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. 1985 இல் திம்புப் பேச்சுவார்த்தை காலத்திலிருந்து ருத்ரா விடுதலைப் புலிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வந்துள்ளார். 2006 ஆரம்பத்தில் ஜெனீவா 2 பேச்சுவார்த்தையிலும் பங்கேற்றார். 2003 இல் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கத்திலும் ருத்ராவின் நிபுணத்துவம் முக்கிய பங்காற்றியதாக கூறப்படுகிறது. இவரது தந்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் ஒரு தடவை யாழ் நகர மேயராக பதவி வகித்துள்ளார்.

அவர் பெறுமதி மிக்க பங்களிப்பை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ளார். அதனால் பிரபாகரனுக்கு நெருக்கமாக முடிந்தது. ராஜீவ் காந்தி கொலை வழக்கிற்கு எதிராக சட்டவாளர்களை ஒருங்கிணைத்தமை, கனடாவில் சுரேஸ் மாணிக்கவாசகத்திற்கு எதிரான வழக்கு மற்றும் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப் புலிகளை இணைப்பதான அமெரிக்க முடிவின் சவால்களை எதிர்கொள்வது போன்ற விவகாரங்களில் அவரது பங்களிப்புகள் அமைந்துள்ளன.

ஐ.நா மற்றும் அமெரிக்க அதிகாரிகளுடன் பேணிவரும் உறவு ருத்ராவினுடைய சொத்தாகக் கொள்ளக் கூடியது. தமிழ் கல்வியாளர்களுடனான சந்திப்புகளின் போது தனது நெருக்கத்தை உணர்த்தும் வகையில் அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட அவர் மறப்பதில்லை.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு முற்பட்ட காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக சட்ட ஆலோசகராகவும் அனைத்துலக இராஜதந்திர விவகாரங்களை ருத்ரா முன்னெடுத்த வேளையில், கொசோவோ மற்றும் கிழக்குத் தீமோர் நிலைமைகளுக்கு ஒத்ததான அரசியல் சூழலை சிறிலங்கா விவகாரத்தில் ஏற்படுத்துவது ருத்ராவின் உத்தியாக இருந்தது. ருத்ராவின் இவ்வாறான பின்னணி, நீண்ட காலமாக ஈழத்தை அடைவதற்காக விரக்தியுடன் பொறுமை இழந்திருந்த புலம்பெயர் தமிழர்களுக்கு உந்துதலாக அமைந்தது.

இவ்வாறு ஐலண்ட் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நன்றி : இணையம்

# மாசி மாத இராசி பலன்கள்




(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

**நினைத்ததை நினைத்த நேரத்தில் முடிக்க வேண்டுமென்று சொல்லும் சிம்ம ராசி நேயர்களே!**

சிறந்த நிர்வாகத்திறன் படைத்தவர்கள் நீங்கள். எல்லா விதமான சுக போகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று சொல்வீர்கள். பலபேரைக் கட்டிக் காக்கும் தன்மை உங்களுக்கு உண்டு என்பதால்தான் உங்களைப் பலரும் வேலைக்கு வைத்துக் கொள்ள பிரியப்படுவார்கள். துணிவே துணை என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் நீங்கள், பணிவை வாழ்வின் மையப்பகுதியில் தான் ஏற்றுக் கொள்வீர்கள்.

உங்களுக்கு இந்த மாசி மாதம் மங்கல நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் மாதமாக அமையப் போகிறது. புகழ், கீர்த்தி அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். இதுவரை தடைப்பட்டிருந்த காரியங்கள் ஒவ்வொன்றாக நடை பெறத் தொடங்கும்.

மாதத் தொடக்கத்திலேயே யோககாரகன் செவ்வாய் உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். எனவே பல நாட் களாக நடைபெறாத காரியங்கள் இனி படிப்படியாக நடைபெறத்துவங்கும். வக்ரச்சனியின் இயக்கமும், உங்களுக்கு நன்மையையே கொடுக்கப் போகிறது.

6க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது உத்யோகம், தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். சப்த மாதிபதியாகவும் சனி விளங்குவதால், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

பெப்ரவரி 13ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4, 9க்கு அதிபதி உங்கள் ராசியைப் பார்க்கும் போது நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பெற்றோர்களின் வழியில் பிரியம் கூடும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப் படுவார்கள். சொத்துச் சேர்க்கைக்கும் அஸ்திவாரம் இடுவீர்கள் சூரியன், புதனுடன் செவ்வாய் இணைவதால் உடன்பிறப்புகளின் வழியில் ஒரு தொழில் தொடங்குவதற்கான முயற்சி வெற்றிபெறும். அன்னியதேசத்தில் இருந்து அனுகூலச்செய்தி வந்து சேரும்.

பெப்ரவரி 25ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கபோகிறார். 3, 10 இக்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் பொழுது எதிர்ப்புக்கள் உருவாகலாம். அருகில் இருப்பவரை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர் வழியில் ஏற்படும் பிரச்சினைகளை சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்வது நல்லது. தொழில் இட மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

மார்ச் 2ஆம் திகதி மீனராசியில் புதன் நீச்சம் பெறப்பொகிறார். 2, 11 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எனவே கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் விழிப்புனர்ச்சி காட்டுவது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்திசெய்து மகிழ்வீர்கள். வரவைக் காட்டிலும் செலவு கூடும். குழந்தைகளின் உத்தியோக நலன்கருதி எடுத்த முயற்சிக்கு ஒருதொகை செலவாகலாம். இக்காலத்தில் சிவன் வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

இம் மாதம் அஸ்டமத்தில் குருவின் ஆதிக்கம் வலுவடைந்தாலும். பஞ்சம ஸ்தானத்தில் சுக்ரனுடன் ராகு இணைந்திருப்பதாலும் சர்ப்ப கிரகங்களுக்குரிய வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களைத் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கூடுதல்கவனம் செலுத்துவது நல்லது. நோய்க்கான அறிகுறி தோன்றும்பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப்பெற வேண்டும். குடும்பச்சுமை கூடும். விரயங்கள் அதிகரிக்கலாம். விரையாதிபதி சந்திரன் உச்சம் பெற்று மாதந்தொடங்குவதால் விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வது நல்லது. ரி.வி, பிரிட்ஜ், கிரைன்டர் போன்றவற்றை மாற்றியமைக்கும் எண்ணம் மேலோங்கும். உடன்பிறப்புக்கள் வழியில் நடைபெறும் சுபகாரியத்தை நடத்தி வைத்து மகிழ்வீர்கள். விநாயகப்பெருமானை விடாது வழிபட்டுவந்தால் வெற்றியைத் தரும்.




(உத்ரம் 2, 3, 4 பாதங்கள், ஸ்தனம், சித்திரை 1, 2 பாதங்கள்)

**பார்க்கும் குருவைப் பலப்படுத்துங்கள்.**

**பிறர் மனம் புன்படாத விதத்தில் பேசும் கலையைக் கற்றுவைத்திருக்கும் கன்னி ராசி நேயர்களே!**

எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று சொல்வீர்கள். அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்வதில் அசகாய சூரர்கள் நீங்கள். ஏதேனும் ஒரு இலட்சியத்தை வாழ்வில் நிறைவேற்றுவீர்கள். உற்றார், உறவினர்கள் தொல்லை கொடுத்தாலும் அதை பொருட்படுத்தாமல் அவர்களுக்கு உதவி செய்வதையே உங்கள் குறிக்கோளாகக் கொண்டு விளங்குவீர்கள்.

உங்களுக்கு இந்த மாசி மாதம் ஜென்மச் சனி வக்ர கதியில் இயங்கும் மாதமாக அமைகிறது. "வக்ரச் சனி" என்றவுடன் அது வளர்சியைத் தருமா என்று நீங்கள் சிந்திக்க வேண்டாம். அண்டி வந்தவரை ஆதரிப்பது தான் நமது பண்பாடு.

அந்த அடிப்படையில் உங்கள் ராசியை நோக்கி வந்த சனியை நீங்கள் பூஜித்து மகிழுங்கள். அப்பொழுது தான் நீங்கள் யோசிக் காமல் செய்த காரியத்தில் கூட வெற்றி கிடைக்கும்.

நீங்கள் செய்த பாக்கியம் குரு சப்தம ஸ்தானத்தில் பலம் பெற்று உங்கள் ராசியைப் பார்ப்பதுதான்.

பார்க்கும் குருவையும் பலப்படுத்தினால் சேர்க்கும் தொகை சேர்ந்து கொண்டே இருக்கும். எனவே சிவாலயத்திற்குச் சென்று குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங் கள்.

பெப்ரவரி 13ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மிகுந்த நற்பலன்கள் வந்து சேரப் போகின்றன.

குறிப் பாக அஷ்டமாதிபதி 6இல் சஞ்சரிக் கும் பொழுது நடைபெறாத சில காரி யங்கள் நடைபெறத் தொடங்கும். சொத்துப் பிரச்சினைகள் அகலும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேர்வர். உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்யோகம் சம்பந் தமாக எடுத்த முயற்சிகளில் நினைத் தபடியே ஊர்மாற்றம் கிடைக்கும்.

பெப்ரவரி 25 ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக புதிய பொறுப்புக்களும், பதவிகளும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகள் வழியில் திருமணப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வீடு கட்டும் பணி தொடரும் பாகப்பிரிவினைகள் சுமூகமாக நடைபெறும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள்.

## சிவல்புரி சிங்காரம்

அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும்.

மார்ச் 2 ஆம் திகதி மீன ராசியில் புதன் நீச்சம் பெறப்போகிறார். ராசி நாதன் புதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும், கேந்திராதிபத்தியத்திற்கு உரிய கிரகம் என்பதால் திடீர் நன்மைகளையும், அது வழங்க வேண்டும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி பெறலாம். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புக்கள் மாறும்.

இம்மாதம் வக்கிரச் சனியின் ஆதிக்கத்தால் வளர்ச்சி கூட சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற் கொள்வது நல்லது. சனிக்குரிய சிறப்புத் தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**


இம்மாதம் ஆடை, ஆபரண சேர்க்கை உருவாவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஜென்மச்சனி வக்ரம் பெறுவதால் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். வீடு கட்டும் வாய்ப்பிற்கு எதிர்பார்த்த சலுகைகள் வந்துசேரும்.

பிறருக்குப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை குறிப்பிட்டபடி கிடைத்தது அறிந்து மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

மாதக் கடைசியில் பக்கத்து வீட்டாரின் பிரச்சினைகளில் தலையிடாது இருப்பது நல்லது. சனிக்கிழமை விரதமிருந்து வழிபட்டால் சஞ்சலங்கள் தீரும். சந்தோஷங்கள் கூடும்.

(தொடரும்)






வடஇந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் வெற்றிபெற்ற மாணவிகளுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :– கரவெட்டி செய்தியாளர்)

# எது கெட்ட பழக்கம் ?

நீங்கள் பிறந்த தினத்திலிருந்தே, "கெட்ட பழக்கங்களுக்கு அடிமை ஆகாதே, நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்" என்று அடிக்கடி போதனை செய்திருப்பார்கள். என்னைக்கேட்டால், அனுபவித்துச் செய்யாமல், பழக்



கத்தினால் எதைச் செய்தாலும் அது கெட்டதுதான்! காலை அலாரம் வைத்து எழுந்திருப்பீர்கள். பரபரவென்று தினப்படி வேலைகளைச் செய்வீர்கள். குளித்து முடித்து, டிபனைத் திணித்துக் கொண்டு, ஸ்கூட்டரிலோ, காரிலோ, பஸ்ஸிலோ அலுவலகம் போய்ச்சேர்வீர்கள். மாலை வரை அங்கேயும் பழகிப்போன விடயங்கள். வேலை முடிந்து வீடு திரும்பி, சாப்பிட்டு, தூங்கி, மறுபடி எழுந்து...

பூட்டப்பட்ட மாடு, வண்டியை இழுத்துக் கொண்டு தினமும் ஒரே இடத்திற்குப் போய்த் திரும்புவது போல், நாற்பது ஐம்பது வருடங்களை இப்படியே தேய்த்து விட்டு அடங்கிப் போவதற்குப் பெயர் வாழ்க்கையா?

ஒரு பெரிய இயந்திரத்தில் பொருத்தப்பட்ட நூற்றுக்கணக்கான பல்சக்கரங்களில் ஒன்றுபோல் ஆவீர்கள். பக்கத்தில் இருக்கும் சக்கரம் உங்களைக் கொஞ்சம் நகர்த்தும். அதன் படி உங்களை அடுத்துள்ள சக்கரத்தை நீங்கள் நகர்த்துவீர்கள். மற்ற சக்கரங்கள் சுழல்வதைப் பொறுத்துத்தான் உங்கள் இயக்கமே தீர்மானிக்கப்படும் என்ற பரிதாப நிலைக்கு வந்து விட்டீர்கள். நீங்கள் ஒரு நிறுவனத்தின் முதலாளியாகக் கூட இருக்கலாம். ஆனாலும் பழக்கத்துக்கு அடிமையாகிவிட்டால், உங்கள் சுதந்திரம் பறிபோய் விடுகிறதல்லவா?

சங்கரன்பிள்ளை ஒரு முறை குடித்து விட்டு 'பாரை' விட்டுப்புறப்பட வெகு நேரமாகிவிட்டது 'எட்டு மணிக்குள் வீட்டில் இருந்தாக வேண்டும் என்பது உன் மனைவியின் நிபந்தனை ஆயிற்றே'? என்று நண்பர்கள் கிண்டலடித்தார்கள். சங்கரன்பிள்ளை ஜம்பமாக 'நோ, நோ! என் வீட்டில் எனக்கு முழு சுதந்திரம் இருக்கிறது' என்று தலை நிமிர்த்திச் சொன்னார். தெனாவட்டாக வீட்டுக்கு நடந்தார்.

வாசலிலேயே ஆபத்தைப் புரிந்து கொண்டார். மனைவியின் பலவீனம் அவருக்குத் தெரியும். சரேலென அவரைக் கடந்து உள்ளே ஓடினார். பருமனாக இருந்த மனைவியால் அவருடைய வேகத்திற்கு ஈடுகொடுத்துத் துரத்த முடியவில்லை. வீட்டின் பல இடங்களுக்கும் துரத்தப்பட்ட சங்கரன்பிள்ளை கடைசியில் கட்டிலுக்கு அடியில் போய்ப் படுத்துக் கொண்டார்.

மனைவியால் கட்டிலுக்குக் கீழே இருந்த இடைவெளிக்குள் நுழைய முடியவில்லை 'நீ என்ன எலியா, ஆண்மகனா? வெளியேவாய்யா!' என்று அவள் கத்தினாள். சங்கரன்பிள்ளை ஹாயாகப்படுத்தபடி சொன்னார்...' நான்தான் இந்த வீட்டின் ராஜா. எங்கே படுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யும் முழு சுதந்திரம் எனக்கு இருக்கிறது'.

சங்கரன்பிள்ளையைப் போல்தானே உங்களில் பலரும் சுதந்திரத்துடன் வாழ்வதாக நினைத்துக் கொண்டு, உங்களையே ஏமாற்றிக் கொள்கிறீர்கள்?

முதன் முதலில் நீங்கள் வேலைக்குப் போனபோது, எந்த நாற்காலி உங்களுக்கு சொர்க்கத்துக்கு நிகராகத் தோன்றியதோ அதே நாற்காலிதான் இன்றைக்கு உங்கள் ரத்த அழுத்தத்தையும் அல்சரையும் இதயவலியையும் உற்பத்தி செய்யும் நரகமாகி விட்டது.

சந்தோஷம் கொடுக்கும் என்றுதானே இந்தப்பணியை தேர்ந்தெடுத்தீர்கள்? பழகிப்போனபின், சந்தோஷத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களே, ஏன்?

படகில் பயணம் செய்வதற்காகத் துடுப்பை எடுத்தவன், படகை விட்டு விட்டு துடுப்பை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பது போல் ஆகிவிட்டீர்களே! உங்கள் புத்திசாலித்தனத்தையும் விளிப்புணர்வையும் பயன்படுத்தாமல், செய்ததையே திரும்பச் செய்வதற்கு நீங்கள் என்ன இயந்திரமா?

ஒரே பக்கத்தைப் பல நூறு ஜெராக்ஸ் பிரதிகள் எடுத்து வைத்துக் கொண்டு, அடுத்தடுத்துப் படித்துக் கொண்டு இருப்பது போல் உங்கள் தினங்களை கலண்டரில் கிழித்துக் கொண்டிருப்தா வாழ்க்கை? முழுமையாக வாழ்வது எனறால் என்ன என்று நீங்கள் எப்போதேனும் யோசித்தது உண்டா?

என்றைக்காவது காலையில் பட்சிகள் விழிக்கும் போது, சந்தோஷமாகக் குரல் கொடுப்பதைக் கேட்டு உற்சாகமாகி இருக்கிறீர்களா? எத்தனை நாட்கள் உடலின் ஒவ்வொரு புள்ளியையும் தண்ணீர் நனைத்த, இறங்குவதை ரசித்துக் குளித்திருக்கிறீர்கள்? வண்டியோட்டும் போது சிந்தனையை எங்கேயோ வைக்காமல், எத்தனை நாட்கள் அனுபவித்து ஓட்டியிருக்கிறீர்கள்? மிக ருசியான உணவாக இருந்தாலும் முதல் கவளத்தைத்தான் அனுபவித்துச் சாப்பிடுவீர்கள். அடுத்தடுத்த கவளங்களை, கை தன் பழக்கப் படி வாயில் கொண்டு போடும். வாய் தன் பழக்கப்



ஆன்மீகம் 19

படி கடித்துக் கூழாக்கி உள்ளே தள்ளும். வாயில் போட்ட உணவு எப்படி மெல்லப்பட்டு உணவுக் குழாயின் வழியே இறங்கி வயிற்றுக்குப் போகிறது என்பதை ஒரு தடவை யாவது முழுமையாகக் கவனித்திருகிறீர்களா?

எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்ற உங்கள் ஆசையை மறந்து விட்டு, வேலையில் சிக்கிக் கொண்டதால், இதற்கெல்லாமா நேரத்தை வீணடிப்பார்கள் என்றுதான் உங்களிடமிருந்து பதில் வரும்.


சும்மா மூச்சுக் கால் மூச்சு விட்டுக் கொண்டிருப்பதற்காகவா வந்தீர்கள்? உயிரை உடலில் இருத்தி வைத்துக் கொள்வதற்குத்தான் அது பயன்படும்.

உயிரோடு இருப்பது வேறு, வாழ்வது என்பது வேறு. ஒரு கணம்... ஒரேஒரு கணத்தையாவது முழு விழிப்புணர்வோடு வாழ்ந்து பாருங்கள். வாழ்க்கையின் போக்கே மாறி விடும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பின்பொறி ஊடகங்களில் செய்திச் செம்மையாக்கம்

02



அத்தகையவை அத்தியாவசியமேயானால் தனித்தனியாக கூறுதல் வேண்டும். இதனாலேயே ஒரு செய்தியைக் கூறிவிட்டு அதன் பின்புலத்தை கூறும் பொழுது "இது இவ்வாறு வந்ததென நினைவூட்டத்தக்கது, குறிப்பிடத்தக்கது" எனக்கூறுவர். இதனை அன்றாடச் செய்தி ஒலி/ஒளி பரப்புக்களின் பொழுது இடம்பெறுவதைக் காணலாம்.

தேர்ந்த ஊடகவியலாளர்கள் வானொலி/தொலைக்காட்சி ஊடகங்களில் செய்தி எழுதுவதற்காக சில நுணுக்கங்களைக் கடைப்பிடிப்பது வழக்கம். செயற்பாட்டு வினையைத் தவிர்த்து செய்வினையில் இடம் பெறக்கூடிய வசனங்கள், தேவையற்ற தகவல்களைத் தவிர்த்தல், இரட்டை எதிர்மறை சொற்களை தவிர்த்தல் (உதாரணம்:-'அவர் அப்படி நினைத்திருக்க மாட்டார் என்று நான் எண்ணவில்லை' என்பதை 'அவர் அப்படி நினைத்திருக்கலாம் என நான் எண்ணுகிறேன் எனலாம்.) போன்ற நுட்பங்களைக் குறிப்பிட முடியும்.

இவ்வாறு நோக்கும் பொழுது செவிப்புல ஊடகங்கள் என்றாலும், கட்புல/செவிப்புல ஊடகங்களென்றாலும் அவற்றிலே எடுத்துக் கூறப்படுவன இறுக்கமானவையாக/நன்கு செவ்வையாக்கம் பெற்றனவாக அமைதல் வேண்டும்.

**கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை**

Edit என்ற ஆங்கிலப் பதத்திற்கு ஒன்றினை தொகுத்தெடுத்தல், அவ்வாறு தொகுக்கும் பொழுது செம்மை கெடாமல் தொகுத்தல் முக்கியமாக, அவற்றில் வரும் விளங்காத பகுதிகளை விளங்கப்படுத்தல் ஆகியன இவற்றிற்கான செவ்வையாக்கத்தினுள் இடம் பெறவேண்டும்.

இந்த உண்மையை மனங்கொள்ளல் அவசியம். ஏனெனில் வானொலிச் செய்திகள் கேட்பவரது, தொலைக்காட்சி பார்ப்பவரது உரிமை அவை விளங்கப்படத்தக்கனவாக இருத்தல் வேண்டும் என்பதாகும். இதனாலேயே இவற்றைத் தொகுப்பதற்கென விசேட உத்தியோகத்தர்கள் இருப்பர்.( திரைப்பட துறையினர் Film Editor- ஐ படத்தொகுப்பாளர் என்றே கூறுவர்) எனவே வானொலி/ஒலிபரப்புச் செய்தியில் பெரும்பாலும் மூலப்பிரதிகள் ஆரம்ப காலங்களில் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படுவது வழக்கம். இதனால் அவற்றை தமிழிலோ, சிங்களத்திலோ மொழிபெயர்க்கும் பொழுது மொழியின் இயல்புக்கு ஏற்ற முறையில் மொழிபெயர்க்க வேண்டும்.

அண்மையில்வானொலியில்செய்தி வாசித்த ஒருவர் Environment Friendly என்னும் பதத்தை "சூழலுக்கு சினேகமான" என்று மொழி பெயர்த்திருந்தார். அத்தகைய மொழி பெயர்ப்புக்கள் தவிர்க்கப்படவேண்டும். செய்தித்தயாரிப்பின்போது ஒரு விடயம் அறிவிக்கப் பட்டது என்பதற்கும் தெரிவிக்கப்பட்டது என் பதற்கும் உள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். அறிவித்தல் என்பது announcing; தெரிவித்தல் என்பது reporting என்று கூறப்பட லாம். ஆங்கிலத்தில் it was announced என்பதற்கும் it was reported என்பதற்கும் வேறுபாடு மிகப் பெரியது என்பதை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

ஒலி/ஒளி ஊடகங்களில் பிற்காலத்தில், ஏன் இப்பொழுதும் கூட, அனேகமாகச் சிங்கள மொழியிலேயே செய்திகள் எழுதப்படுகின்றன. இதனால் மும்மொழிகளில் செய்தி ஒலி/ஒளி பரப்பை நடத்தும் நிறுவனங்கள் மொழிபெயர்ப்பில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளன. சிங்கள மொழியில் தயாரிக்கப்படும் செய்திப் பிரதிகள்-முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகின்றன. பின்னர் அவை தமிழ் மொழியில் பெயர்க்கப்படுகின்றன. மொழி பெயர்ப்பாளர்கள் சிங்கள மொழியிலும், தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாயின், மொழி பெயர்த்தல் மிகவும் சுலபமானது மட்டுமல்லாமல், வேகமாக உரிய நேரத்தினுள் செய்தி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒலிபரப்புவதற்கு தயாராகிவிடும். அல்லாது போனால் பல சிரமங்களுக்கும் தவறான சொற்பிரயோகங்களுக்கும் உட்பட நேரிடும். இந்நிலையில் செவ்வையாக்கம் செய்வோர் மும் மொழி அல்லது இரு மொழிப் பாண்டித்தியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். எனவே ஆங்கில மொழியில் சந்தேகமற வாசித்து அதன்பின் அவற்றைத் தொகுத்து தன்மொழியில் கூறுதல் வேண்டும். ஆனால் மொழிபெயர்ப்பு செய்வதில் மிகப் பெரிய ஆபத்தும்(Risk) உண்டு. அதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

**வீ.ஏ.திருஞானசுந்தரம்,**
**முன்னாள் பிரதிப்பணிப்பாளர்நாயகம்,**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.**

(தொடரும்)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் காலை 11 மணிவரை கடற்கரை வீதி பாசையூரிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கடற்கரை வீதி ஈச்சமோட்டை சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. தலைவராக சி.இலட்சுமிகாந்தன், உப தலைவர்களாக பொ.தர்மேந்திரன், கு.யோகராசா, செயலாளராக ஆர்.தணிகைநாதன், உப செயலாளராக வை.பாலசுப்பிரமணியம்,பொருளாளராக செ.குகதாசன், காப்பாளர்களாக லயன் வல்லிபுரம் பரமசிவம், க.மகேசன் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.நிக்காந்தன், ச.சிவானந்தன், சி.பத்மராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2)

# கூட்டுப் பஜனையும் முக்தி தீட்சையும்

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினரால் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் கூட்டுப்பஜனை நிகழ்வும் முக்தி தீட்சை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

எனவே அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆசி பெறுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)

# இலவச தேவார பண்ணிசை வகுப்பு

வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானத்திற்கமைய யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் சிவதொண்டன் நிலைய நூலக மேல்மாடி மண்டபத்தில் இலவச தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை ஒவ்வொரு சனி, ஞாயிறு கிழமைகளில் பிற்பகல் 4 மணியிலிருந்து 5.30 மணிவரை அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடாத்தி வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில் சிறுவர், பெரியோர், மாணவர்கள், இருபாலாரும் பங்குபற்றி பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# பொன்சேகாவுக்கு விருது

(கொழும்பு)

போர் வெற்றிக்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமை தாங்கியதாக ரணவிருவோ (போர் வீரர்கள்) அமைப்பு தெரிவித்துள்ளது.

உயிரைப் பணயம் வைத்து, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமை தாங்கிய ரணவிருவோ (போர் வீரர்கள்) அமைப்பு தெரிவித்துள்ளது. அவரது அர்ப்பணிப்பைப் பாராட்டி அந்த அமைப்பு அவருக்கு விருதொன்றை வழங்கியுள்ளது. இந்த விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் சோலிஸ் விடுதியில் இடம்பெற்றது.

பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட இந்த விருதை பொன்சேகா சார்பில் அவரது மனைவி பெற்றுக்கொண்டார். அதேபோல் அனோமா பொன்சேகாவுக்கு விஸ்வ வீரமாதா என்ற விருதும் வழங்கப்பட்டது.

இந்த வைபவத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, அனுரகுமார திஸாநாயக்க, டிரான் அலஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ந-5)



யா/புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை முன்னாள் ஆசிரியர் செல்வி செ.பவானி வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# முகாம்களில் உள்ளோர் வாக்களிக்கும் வகையில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட வேண்டும்

## தேர்தல் ஆணையாளரிடம் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

புத்தளம் உட்பட முகாம்களில் தங்கியுள்ளவர்கள் வாக்களிக்கும் வகையில் வாக்குச் சாவடிகளைக் குறித்த முகாம்களில் அமைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் எம்.பியுமான ஹசன் அலி கோரியுள்ளார்.

இது குறித்து அவர் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் வாக்காளர்கள் தமது வாக்களிக்கும் சுதந்திரத்தை முறையாகப் பயன்படுத்துவதற்குரிய வழிவகைகளை இலகுவாக்கித் தரவேண்டியது தேர்தல் ஆணையாளரின் தலையாய கடமையாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாரீன்டைம்பற்று பிரதேசச்சபை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி பிரதேசசபை போன்ற இடங்களைச் சேர்ந்த முஸ்லிம் வாக்காளர்கள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேபோன்று மன்னார் மாவட்டத்திலுள்ள ஒரு சில பிரதேசசபைகளைச் சேர்ந்த வாக்காளர்களும் தமது வாக்குரிமையைப் பாவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யா/வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். (ஸ்ரீ-9)

# மல்வத்தை பீடாதிபதியின் பெயரால் மோசடி செய்த பிக்குவுக்கு இருவருட கடுழியச் சிறை

கண்டி மல்வத்தைப் பீடாதிபதியின் பெயரால் மோசடி நடவடிக் கையில் ஈடுபட்ட பிக்கு ஒருவருக்கு அநுராதபுரம் பிரதான நீதவான் நீதி மன்றம் இருவருட கடூழிய சிறைத்தண்டனையும் 30 ஆயிரம் ரூபாய் அபராதமும் வழங்கி நேற்றுத் தீர்ப்பளித்தது.

இப்பிக்கு புத்த சமய விவகார அமைச்சுக்கு மல்வத்தை பீடாதிபதியைப் போல கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார். அதில் மல்வத்தை பீடாதிபதியின் இறப்பர் முத்திரையைப் போன்ற இறப்பர் முத்திரை பயன்படுத்தி மல்வத்தைப் பீடாதிபதி போல் கையொப்பமிட்டு இருக்கின்றார். அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இரகசிய முறைப்பாடு ஒன்றின் பெயரில் பிக்குவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் ஆக்கினர்.

அநுராதபுரம் பிரதான நீதவான் தர்சிகா விமலசிறி பிக்குவைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்கினார். தண்டப்பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் 6 மாத சிறைத்தண்டனை மேலதிகமாக விதிக்கப்படும் என்றும் நீதவான் தீர்ப்பில் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.02 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ★ 1753 - சுவீடன் கிரகோரியின் நாட்காட்டிக்கு மாறியது. பெப்ரவரி 17ஆம் நாளின் பின்னர் மார்ச் 1ற்கு மாறியது.
- ★ 1788 - லெப்டினண்ட் போல் (Paul) என்பவர் சிட்னியில் இருந்து நோர்போல்க் தீவுக்கு கைதிகளைக் குடியேற்றச் சென்ற போது மனிதர்களற்ற லோர்ட் ஹோவ் தீவைக் கண்டுபிடித்தார்.
- ★ 1854 - பிரித்தானியா ஒரேஞ்சு சுயாதீன நாட்டை விடுதலை பெற்ற நாடாக அங்கீகரித்தது.
- ★ 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: எச்.எல்.ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் யூஎஸ்எஸ் ஹவுசட்டோனிக் என்ற போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- ★ 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: தென் கரோலினாவின் கொலம்பியா நகரம் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் படைகள் வெளியேற்றத்தின் போது தீயிடப்பட்டது.
- ★ 1867 - சுயஸ் கால்வாய் ஊடாக முதலாவது கப்பல் சென்றது.
- ★ 1881 - இலங்கையில் இரண்டாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நாட்டின் மொத்தத் தொகை 27 இலட்சத்து 59 ஆயிரத்து 738, வடமாகாணத்தில் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 500, யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரத்து 57 ஆகக் கணக்கெடுக்கப்பட்டது.
- ★ 1890 - பிரித்தானிய நீராவிக்கப்பல் ஒன்று சீனக் கடலில் மூழ்கியதில் 400 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1933 - நியூஸ்வீக் முதலாவது இதழ் வெளிவந்தது.
- ★ 1936 - சிறுவர்களுக்கான அதிமேதாவி மாயாவி முதற்தடவையாக வரைகதைகளில் தோன்றினார்.
- ★ 1947 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா தனது ஒலிபரப்புச் சேவையை சோவியத் ஒன்றியத்துக்கு விஸ்தரித்தது.
- ★ 1957 - மிசூரியில் வயோதிபர் இல்லம் தீக்கிரையாகியதில் 72 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1962 - மேற்கு ஜேர்மனியின் ஹம்பூர்க் நகரில் இடம்பெற்ற புயலில் 300 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- ★ 1979 - மக்கள் சீனக் குடியரசுக்கும் வியட்நாமுக்கும் இடையில் போர் ஆரம்பமாகியது.
- ★ 1990 - இலங்கையின் ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் ரிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- ★ 1996 - பென்சில்வேனியாவில் இடம்பெற்ற சதுரங்க ஆட்டத்தில் காரி காஸ்பரொவ் ஐபிஎம்மின் டீப் புளூ கணனியை வென்றார்.
- ★ 2006 - பிலிப்பைன்சில் சென் பேர்னார்ட் நகரில் இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி ஆயிரம் பேருக்கு அதிகமானோர் உயிருடன் புதையுண்டனர்.

### பிறப்புகள்

- ★ 1888 - ஓட்டொ ஸ்டேர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (இ 1969)
- ★ 1927 - யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர் (இ. 2009)
- ★ 1984 - சதா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- ★ 1956 - எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (பி. 1891)
- ★ 1970 - ஷ்மூவெல் யோசெப் ஆக்னன், நோபல் பரிசு பெற்ற இஸ்ரேல் எழுத்தாளர் (பி. 1888)
- ★ 1986 - ஜே.கிருஷ்ணமூர்த்தி, தத்துவவியலாளர் (பி. 1895)

**2000 - விண்டோஸ் 2000 வெளியிடப்பட்டது.**



# ஒப்பரேட்டிங் சிஸ்டம்

டொஸ், விண்டோஸ், லினக்ஸ் எனப் பல ஒப்பரேட்டிங் சிஸ்டங்களைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். ஒப்பரேட்டிங் சிஸ்டம் பற்றிய சில குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன.

**கணனி உயிர்**

நமது உடலை இயங்க வைக்க உயிர் தேவை. உயிரற்ற உடலைக் கொண்டு எந்தப் பயனுமில்லை. அதுபோல் கணனி என்ற ஹார்ட்வெயரை (அதாவது உடலை) இயங்க வைக்க ஒப்பபேட்டிங் சிஸ்டம் (அதாவது உயிர்) சிஸ்டம் இல்லாத கணனியைக் கொண்டு எந்தப் பயனுமில்லை. அதை ஒரு அலங்காரப் பொருளாக வேண்டுமானால் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

கணனியும் ஒப்பரேட்டிங் சிஸ்டமும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன. இது இல்லாமல் அது இல்லை. அது இல்லாமல் இது இல்லை.

**ஒப்பரேட்டிங் சிஸ்டம் என்றால் என்ன?**

உலோகங்களாலும் பிளாஸ்டிக்குகளாலும் ஆன உயிரற்ற ஒரு பொருள்தான் கணனி கார், பைக் மிக்ஸி, டிவி போன்ற பொருட்களை எடுத்துக் கொண்டால் இன்ன வேலைகளைச் செய்ய வேண்டும் என்று வரையறுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்ன வேலையைச் செய்ய வேண்டும் என்று கணனிக்கு வரையறுக்கப் படவில்லை. தருகிற ஆணைகளை (Instruction) ஒழுங்காகப் பின்பற்றும்படி அதற்குக் கூறப்பட்டுள்ளது.

கணனி பின்பற்ற வேண்டிய ஆணைகள் அடங்கிய பட்டியலை புரோகிராம் என அழைக்கிறோம். புரோகிராமை கணனி இயக்குகிறது. (Execute) எனச் சொல்லுவது ஒவ்வொரு ஆணையையும் வரிசையாக மேற் கொள்வதைத்தான் குறிக்கிறது.

குறிப்பிட்ட தேவையை நிறைவேற்ற ஒரு புரோகிராம் எழுதப்படலாம். எடுத்துக்காட்டாக திகதியையும் நேரத்தையும் காட்ட ஒரு புரோகிராம் எழுதலாம். வேர்ட் புரோசசிங் வேலையை செய்ய ஒரு நீண்ட புரோகிராம் தேவைப்படலாம். நாம் இயக்குகிற எல்லா புரோகிராம்களும் கொண்ட தொகுப்பை சொப்ட்வெயர் என்கிறோம். கணனிக்கு உயிரைக்கொடுப்பது சொப்ட்வெயரின் ஒரு பிரிவான ஒப்பரேட்டிங் சிஸ்டமாகும். அப்ளிகேஷன் சொப்ட்வெயர், சிஸ்டம் சொப்ட்வெயர் என இரு வகையாக சொப்ட்வெயரைப் பிரிப்பார்கள் .சிஸ்டம் சொப்ட்வெயரின் மறு பெயர்தான் ஒப்பரேட்டிங் சிஸ்டமாகும். கணனிக்கும் அப்ளிகேஷன் சொப்ட்வெயர்களுக்கும் இடையில் இருந்து ஒரு பாலமாக செயற்படுவது ஒப்பரேட்டிங் சிஸ்டமாகும். ஒப்பரேட்டிங் சிஸ்டம் என்ன வேலைகளைச் செய்கிறது? கணனியில் பல பணிகளை முகாமை (Management) செய்வது ஒப்பரேட்டிங் சிஸ்டமாகும்.



- உள்ளீடு வெளியீடு (Input/Output)
- நினைவக (Memory) முகாமை
- பணி (Task) முகாமை
- பைல் முகாமை

கீபோர்ட், மொனிட்டர், பிரிண்டர் போன்ற ஹார்வெயர் உறுப்புக்களைக் கண்காணித்து அவற்றிடம் வேலை வாங்குவது ஒப்பரேட்டிங் சிஸ்டமே. எடுத்துக்காட்டாக ஒவ்வொரு தடவையும் கீபோர்டில் உள்ள கீகளை நீங்கள் அழுத்தும் பொழுது ஒப்பரேட்டிங் சிஸ்டம் கண் காணித்து அந்த கீகள் குறிக்கிற எழுத்துக்களை மொனிட்டரில் வெளிப்படுத்துகிறது.

உங்கள் கணனியில் உள்ள நினைவ கத்தின் அளவை அறிந்து அதைப் புத்திசா லித்தனமாக ஒப்பரேட்டிங் சிஸ்டம் பயன்படு த்திக் கொள்ளும். நினைவகத்தில் தான் தங்குவதற்கான இடம், அப்ளிகேஷன் சொப் ட்வெயர்கள் தங்குவதற்கான இடம், நீங்கள் டைப் செய்கிற விபரங்களை இருந்த இடம், டிஸ்க்கிலுள்ள பைலை படிக்கும் பொழுது அதன் விபரங்களை வைக்க வேண்டிய இடம் போன் றவற்றை ஒப்பரேட்டிங் சிஸ்டமே தீர்மா னிக்கிறது.

பல ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அப்ளிகேஷன்களை இயக்க முடியும் Multitask என இதை அழைப்பார்கள். இவ்வாறு பல பணிகளில் ஈடுபடும் போது ஒ எறுக்கும் மற்றொன்றுக்கும் இடையே பிணக்கு எதுவும் ஏற்படாமல் சிக்கலின்றி வழி நடத்த ஒப்பரேட்டிங் சிஸ்டம் உதவுகிறது.

ஒரு குறிப்பிட்ட பணியை இரு சிறு கூறுகளாகப் பிரித்து இரண்டு சிபியுக்களிடம் (CPU) கொடுத்து வேலையை முடிக்கவும் ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்குத் தெரியும். நீங்கள் உருவாக்கும் பைல்கள் மற்றும் அப்ளிகேஷன்களுக்கான பைல்கள் போன்றவற்றை ஒப்பரேட்டிங் சிஸ்டமே பராமரிக்கிறது. பைலைச் சேமிக்க, அழிக்க, வேறிடத்துக்கு நகர்த்த, பெயர்மாற்றம்செய்ய போன்ற வேலைகளை நீங்கள் மேற்கொள்கையில் ஒப்பரேட்டிங் சிஸ்டமே அவற்றை மேற்கொள் கிறது.

**ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் வகைகள்**

எவ்வளவு நபர்கள், எவ்வளவு பணிகள் ஒரு நேரத்தில் பயன்படுத்த மேற்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தைப் பிரிக்கிறார்கள். மூன்று வகைகள் நமக்கு கிடைக்கின்றன.

- ஒரு பயனாளர் - ஒரு பணி (Single User Single task)
- ஒரு பயனாளர் - பல பணி (Single User Multi task)
- பல் பயனாளர்/ பல பணி (Multi User Multi task)
- ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே அதுவும் ஒரு பணியினை மட்டுமே ஒரு பயனாளர்/ஒரு பணி என்ற வகை ஒப்ப ரேட்டிங் சிஸ்டத்தில் செய்ய முடியும். அடுத்த பணியை செய்ய விரும்பினால், முதல் பணியை அவர் மூட வேண்டும். DOS ஒப்பரேட்டிங் சிஸ்டம் இதற்கான எடுத்துக்காட்டாகும்.

ஒரு நேரத்தில் ஒருவரை மட்டுமே அவர் எவ்வளவு பணிகளை வேண்டு மானாலும் செய்யும்படி அனுமதிக்கிற ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை ஒரு பயனாளர்/ பல பணி எனலாம். விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டம் இதற்கான எடுத்துக்காட்டாகும்.

ஒரே நேரத்தில் பல பயனாளர்கள் நுழையும் படியும் அவரவர்கள் தங்களுக்கு வேண்டிய பல பணிகளை செய்யும்படியும் தயாரிக்கப்பட்ட ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை பற்பயனாளர் – பல மணி எனலாம். யுனிக்ஸ், லினக்ஸ், விண்டோஸ் என்டி ஒப்பரேட்டிங் சிஸ்டங்கள் இதற்கான எடுத்துக்காட்டுக்களாகும்.




# இணையத்தளத்தில்-ஏமாறாமல்-இருக்க?

இணையத்தளம் மற்றும் இமெயில் வழியில் பலர் ஏமாற்றப்படுவதாக செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. சிறிது சலனப்பட்டாலும் நாம் நிதானம் தவறி நம்மை ஏமாற்றத் திட்டமிடுபவர்களின் வலைகளில் விழுந்து நம் நிம்மதியை, நிதியை இழந்துவிடுகிறோம். இதுபோல் பலியாகாமல் இருக்க நாம் எடுக்க வேண்டிய சில முன்னெச்சரிக்கைகளை இங்கு பார்க்கலாம்.

**◆ முற்பணம் கட்டாதீர்கள்**

ஏமாற்றப்படும் பல வேளைகளைப் பட்டியலிட்டால் முற்பணம் கட்டச் சொல்லி அழைக்கும் அழைப்புகளுக்குப் பலியாவோரே அதிகமாய் இருப்பதைப் பார்க்கலாம். பெரிய பரிசு உள்ளது. கடன் தீர்க்கப் பணம் தருகிறோம். பெரிய வேலை உங்களுக்கு மட்டுமே தருகிறோம். இலவசமாய் இயக்கிப் பார்க்கலாம் என செய்திகளைத் தந்து தூண்டிலிட்டு பின்னர் அதற்கு சரி என்கையில் முற்பணமாக ஒரு தொகையை செலுத்தச் சொல்லி அழைப்பு வரும். இதனை மிக அழகாக நியாயப் படுத்தியும் செய்தி தரப்படும். பெரிய அளவில் தான் பணம் அல்லது உதவி கிடைக்கப் போகிறதே. செலுத்தினால் என்ன என்று ஒரு கணம் எண்ணிவிட்டால் உங்கள் பணம் அவ்வளவு தான்.

அல்லது தொடர்ந்து மேலும் மேலும் பணம் செலுத்த கட்டாயப்படுத்தப்படுவீர்கள். இது போல செய்திகளை அது எந்த இடத்திலிருந்து வந்தாலும் உதாசீனப்படுத்தி விடுவதே நாம் பலியாகாமல் இருக்க ஒரே வழி.

**◆ எக்கவுண்ட் எண் தரலாமா?**

மெயில்களை அனுப்பி உங்களை வீழ்த்தும் பெரும்பாலான ஸ்பேம் செய்திகளில் உங்களுடைய வங்கிக் கணக்கு எண் நெட் பாங்கிங் பாஸ்வேர்ட் கேட்டு வரும் மெயில்களே அதிகம். வங்கிக் கணக்கு எண் மற்றும் தகவல்களைக் கொடுத்து விட்டால் உங்கள் வங்கிக் கணக்கு அவ்வளவு தான். பைசா கூட அதில் இருக்காது. நீங்கள் சரியான இணையத்தளத்தில் பொருள் வாங்குவதாக இருந்தாலும் உங்கள் கிரெடிட் கார்டை மட்டுமே பயன்படுத்தவும்.

**◆ தானாக தனிநபர் தகவல் தரலாமா?**

ஒரு சிலர் மெயில் செய்தியில் வரும் ஏமாற்று வார்த்தைகளை நம்பி தங்களைப் பற்றிய தனி நபர் தகவல்களைத் தந்து விடுவார்கள். சிலர் தாங்கள் பணியாற்றும் நிறுவனம் குறித்த தகவல்களையும் தங்களை அறியாமல் தந்து மாட்டிக் கொள்வார்கள். இதுபோன்ற விடயத்தில் அதிக கவனத்துடன் நடந்து கொண்டு மாட்டிக் கொள்ளும் நிகழ்வினைத் தவிர்க்க வேண்டும்.

**◆ போலி பேஸ்புக் செய்திகள்**

பேஸ்புக்கில் எக்கவுண்ட் இல்லாமல் இருந்தால் கூட உங்கள் எக்கவுண்ட்டிற்குப் பலவாரியாக செய்திகள் வரும். புகழ் பெற்றவர்கள் மாட்டிக் கொண்டார்கள். அது பற்றி அறிய வேண்டுமா என ஒரு செய்தி உங்கள் பேஸ்புக் எக்கவுண்ட்டை ஒருவர் நீக்கி விட்டார் , நீக்கியவர் யாரெனத் தெரியும்.

மீண்டும் எக்கவுண்ட் தொடங்க லாமே என்று ஒரு செய்தி வரும். இது போன்ற செய்திகள் எல்லாம் உங்களைச் சிக்க வைக்கத்தான்.

**◆ பாதுகாப்பு வழிகளைக் கடைப் பிடியுங்கள்**

இந்த மலரில் பல முறை ஒன்லைன் வர்த்தகத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை எழுதி வந்திருக்கிறோம். அவற்றை அவசியம் கடைப்பிடிக்கவும் இணையத்தில் எப்போதும் நாம் ஏமாற்றப் பட்டு விடுவோம் என்ற எச்சரிக்கையுடனேயே அதனை அணுகினால் நிச்சயம் நீங்கள் பலியாகமாட்டீர்கள்.

# அது என்ன-ஹெர்ட்ஸ்

கணனி தொழில்நுட்பம் பற்றிப் பேசுகையில் நாம் அடிக்கடி மெகா ஹெர்ட்ஸ் மற்றும் ஜிகா ஹெர்ட்ஸ் என்று பேசுகிறோம், படிக்கிறோம். இந்த ஹெர்ட்ஸ் எதனைக் குறிக்கிறது? ஏன் இந்த பெயர் வந்தது என்று பார்ப்போமா!

ஹெர்ட்ஸ் என்பதனை சுருக்கமாக ஏத் என்று எழுதுகிறோம். இது Hertz என்பதன் சுருக்கம். இது ஜேர்மன் பிசிக்ஸ் விஞ்ஞானி Heinrich Rudolf என்பவரின் குடும்பப்பெயர். ரேடியோ மற்றும் எலக்ட்ரிக்கல் அலைவரிசையினை மெட்ரிக் முறையில் அளந்திட இந்தப் பெயர் வைக்கப்பட்டது. ஒரு ஹெர்ட்ஸ் என்பது ஒரு விநாடியில் ஏற்படும் ஒரு சுற்று அல்லது அசைவு (ரேடியோ அலைவரிசையில்), கணனியைப் பொறுத்தவரை இது மொனிட்டருடன் அதிகம் சம்பந்தப்படுத்தி பேசப்படுகிறது.

சி.ஆர்.டி. மொனிட்டர் ('டிவி' பெட்டி போல இருப்பது) அதன் ஸ்கிரீன் இமேஜை தொடர்ந்து காட்டாமல் விட்டு விட்டுத் தான் காட்டுகிறது. ஆனால் அதனை நாம் நம் கண்களால் பார்த்தால் கண் கெட்டுப் போகும். எனவேதான் விநாடியில் பலமுறை இது விட்டு விட்டுக் காட்டப்படுகையில் இடைவெளி தெரிவதில்லை .

எடுத்துக்காட்டாக 85 ஏத் என்பதில் விநாடி நேரத்தில் 85, முறை இமேஜ் பின் வாங்கப்பட்டு மீண்டும் காட்டப்படுகிறது. அத்தனை முறை காட்டப்படுவதனாலேயே இமேஜ் அப்படியே நிலையாக நிற்பது போல நாம் உணர்கிறோம்.

மெஹா ஹெர்ட்ஸ் Meha hertz (MHz) ஒரு மெஹா ஹெர்ட்ஸ் என்பது பத்து இலட்சம் சுற்றுக்களாகும். அதாவது ஒரு விநாடியில் பத்து இலட்சம் சுற்றுக்கள் ஏற்படுகின்றன. இது எப்படி ஏற்படுகிறது என்பதனைப் படமாகவோ அல்லது வேறு வழியாகவோ விளக்குவது கஷ்டம். கணனி புரோசசரைப் பொறுத்தவரை மெஹா ஹெர்ட்ஸ் என்பது மிகவும் சாதாரணம்.

ஒரு கணனி புரேராசசர் உள்ளாக அமைந்த ஒரு கடிகார துடிப்பினை மையமாகக் கொண்டு செயற்படுகிறது.

ஒவ்வொரு துடிப்பிற்கும் ஒரு செயல் மேற்கொள்ளப்படுகிறது. எத்தனை முறை இந்த துடிப்பு ஏற்படுகிறது என்பதுதான் புரோசசரின் கிளாக் ஸ்பீட் என அழைக்கப்படுகிறது. இந்த வேகம் மெஹா ஹெர்ட்ஸ் என்பதில் அளக்கப்படுகிறது. முதலில் வந்த பேர்சனல் கணனிகள் 4.77 மெஹா ஹெர்ட்ஸ் வேகம் கொண்ட புரேராசர்களைக் கொண்டிருந்தன.

அதாவது விநாடிக்கு ஏறத்தாழ 48 இலட்சம் கிளாக் துடிப்புக்கள். தற்போதைய பென்டியம் 4 கணனி புரோசசர் 3.2 ஜிகாஹெர்ட்ஸ் வேகம்கொண்டுள்ளன. (ஒரு ஜிகா ஹெர்ட்ஸ் என்பது 1000 மெஹா ஹெர்ட்ஸ்). எனவே கணக்குப் போட்டு இந்த அதிவேக துடிப்புக்களை உணர்ந்து கொள்க.

ஜிகாஹெர்ட்ஸ் Giga hertz (GHz) கணனி உலகில் இது கணனி புரோசசரின் வேகத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு ஜிகா ஹெர்ட்ஸ் என்பது 1000 மெஹா ஹெர்ட்ஸ். தற்போது வரும் கணனி புரோசசர் வேகம் இந்த அளவிலேயே சொல்லப் படுகிறது.

# அரசாங்கத்தை அபகீர்த்திக்குள்ளாக்கும் நடவடிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர்

## அமைச்சர் மைத்திரிபால குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் ஆசிய வலய மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க் கட்சி தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலை வருமான ரணில் விக்கிரமசிங்க இலங்கை தொடர்பில் தவறான கூற்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வழமைபோன்று மீண்டும் இந்த செயற்பாட்டை ஆரம்பித்துள்ளமை தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம். யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தையும் இராணுவத்தையும் அசௌகரியப்படுத்தும் நோக்கில் மேற்கு நாடுகளில் எதிர்க்கட்சி தலைவர் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வந்தார்.

அதனை மீண்டும் அவர் செய்து வருகின்றார். என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடவுளின் சாபக்கேட்டினாலேயே நாட்டில் வெள்ளப்பேருக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சிக்கே தற்போது கடவுளின் சாபக்கேடு ஏற்பட்டுள்ளது. கட்சியின் ஆதரவாளனுக்கு யார் தலைவர் என்றே தெரியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அமைச்சர் இந்த விடயங்களை கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

பொதுநலவாய நாடுகளின் ஆசிய வலய மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க் கட்சி தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க இலங்கை தொடர்பில் தவறான கூற்றை வெளியிட்டுள்ளார்.

அது தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம். அவர் கடந்த காலங்களிலும் பல தடவைகள் இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவம் தொடர்பில் தவறான பிரசாரங்களை மேற்கு நாடுகளில் மேற்கொண்டு வந்தார். வழமைபோன்று அதே விடயத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார். நாட்டின் உள் விவகாரங்கள் தொடர்பில் தவறான விடயங்களை கூறி வந்தார்.

யுத்தகாலத்திலும் இலங்கை அரசாங்கத்தையும் இராணுவத்தையும் அசௌகரியப்படுத்தும் நோக்கில் மேற்கு நாடுகளில் எதிர்க்கட்சி தலைவர் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வந்தார். மீண்டும் இந்த செயற்பாட்டை ரணில் விக்ரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் சென்று அக்காலத்தில் இலங்கை தொடர்பாக தவறான பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தார். தற்போது பொதுநலவாய மாநாட்டில் மீண்டும் ஒரு முறை தவறான பிரசாரத்தை செய்துள்ளார்.

கடவுளின் சாபத்தினாலேயே நாட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி கூறியுள்ளது. ஆனால் கடவுளின் சாபம் ஐக்கிய தேசிய கட்சிக்கே ஏற்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாசவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அக்கட்சியின் ரவி கருணாநாயக்கவே கோரிக்கை விடுத்துள்ளார். யார் தலைவர் என்று கட்சியின் ஆதரவாளருக்கே தெரியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் கட்சிக்குள் எந்தளவு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது எமது ஆளும் கட்சியில் எவ்வித மான நெருக்கடியும் பிரச்சினையும் இல்லை நாங்கள் மிகவும் சிறப்பாக தேர்தலுக்கு தயாராகிவருகின்றோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## குருமார் ஒன்றிய கூட்டம்

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை குருமார் ஒன்றியத்தின் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா புனித பேதுரு ஆலயத்தில் மிஷன் திருச்சபைத் தலைவர் அருட்திரு அ.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு கிழக்கு மாகாணம், கொழும்பு, மலையகம், மன்னார், வன்னிப் பிரதேசம் மற்றும் யாழ்ப்பாணக் குருமார்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# உலகளாவிய உணவு விலையேற்றம் அபாயகட்டத்தை நெருங்குகிறது

## உலக வங்கியின் தலைவர் தெரிவிப்பு

உலகளாவிய உணவு விலை ஏற்றம் அபாய கட்டத்தை நெருங்குவதாகவும் இதன் காரணமாகவே மத்திய கிழக்கு, மத்திய ஆசிய நாடுகளில் அரசியல் குழப்பமும் வன்முறைகளும் அதிகரித்து வருகிறது என உலக வங்கியின் தலைவர் ராபர்ட்ஜியோலிக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

உலகளவில் உணவு விலை ஏற்றம் வளர்ந்த நாடுகள் மட்டுமின்றி வளர்ந்து வரும் நாடுகளிலும் அரசியல், பொருளாதார சமூக மாற்றங்களை உண்டாக்குகின்றன. எனவே உணவு பாதுகாப்பு என்பது எந்த நாட்டிற்கும் இன்றியமையாத ஒன்றாகும். எனவே கோதுமை, சீனி, சமையல் எண்ணெய் இவற்றின் விலைகள் கடுமையாக உயர்ந்ததன் பின்னணியில்தான் சமீபத்தில் மத்திய கிழக்கு நாடுகளான எகிப்து துனீசிய, ஏமன் ஆகிய நாடுகளில் வன்முறைகள் தாண்டவமாடின. பொது மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டம் நடத்த காரணமாக அமைந்தது. விவசாய பொருட்கள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளான அவுஸ்திரேலியா - ரஷ்யா ஆகிய நாடுகளில்மழை, வெள்ளம், புயல், காட்டுத்தீ போன்ற இயற்கை சீற்றங்களால் பெருமளவு பாதிக்கப்பட்டன.

உலகவங்கி சமீபத்தில்வெளியிட்ட ஆய்வின் படி கடந்த 2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரையில் உலகளவில் 44 மில்லியன் மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் வளர்ந்து வரும் நாடுகள் அதிகம். எனவே உணவுப்பாதுகாப்பு குறித்து சர்வதேச சமூகம் புதிய சீர்திருத்தத்தினை கையாள வேண்டும். ஏற்றுமதிக்கு தடை விதிப்பது விலை வாசியை கட்டுக்குள் கொண்டு வருவது ஒன்று தான் மிகச் சிறந்த வழி என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## கண்ணீர் அஞ்சலி!



எமது கல்லூரியின் மாணவர் தலைவனும்
க.பொ.த.(உ/த) - கலைப்பிரிவு (13A2)
இறுதியாண்டு மாணவனுமான

**செல்வன்.தர்மரட்ணம் துஷாந்**

2011.02.16 அன்று காலமாகியதையிட்டு
எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்.

கல்வியிலேயே கருத்தூன்றியவன்
கல்லூரியிலேயே விருப்புடையவன்
எள்ளென்றால் எண்ணெயாய் நிற்கும் இயல்பினன்
அடக்கமும் ஒழுங்கும் அவனது அணிகலன்கள்
நேற்றும் எம்முடன் நின்று உறவாடியவன்
இன்று என்னானான்? எங்கு சென்றான்?
காலன் விதித்த கணக்கில் மறைந்தானா?
ஏங்கித் தவிக்கும் எம்மிதயங்கள்
குமுறியழும் ஓசை உமக்குக் கேட்கிறதா மகனே!

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள்

கல்லூரிச் சமூகம்,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
கரவெட்டி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
28.02.1943

உதிர்வு
20.01.2011

**அமரர் நீலாம்பிகை சுந்தரலிங்கம் (புனிதம்)**

அன்பின் இருப்பிடமாய் அறிவின் உறைவிடமாய்
பண்புடனும் பாசமுடனும் எமை வளர்த்த
எங்கள் அன்பு அம்மாவே மாலை நான்கு மணி
எப்போ வருமென்று ஆவலுடன் காத்திருப்போம்
தொலைபேசியில் எங்கள் அம்மாவின் குரல்கேட்க,
இனி எப்போ அம்மா உங்கள் குரலைக் கேட்போம்
எம் குடும்ப விளக்காய் திகழ்ந்த தாயே
எம்மைவிட்டு விண்ணுலகம் சென்றீரே
என்றென்றும் நாம் மறவோம் உன் நினைவால் வாழ்ந்திருப்போம்.

*கடந்த 20.01.2011 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் (17.02.2011) இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்திலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (19.02.2011) நாளை மறுநாள் சனிக்கிழமை பகல் 11.30 மணியளவில் கொழும்பிலுள்ள அன்னாரது இல்லத்திலும் இடம் பெறும். அன்றைய தினம் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

எங்கள் தெய்வத்தின் பிரிவுத்துயரில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசிமூலம் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமக்கு பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல ஆதிபராசக்தியை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தற்காலிக முகவரி: H-7, Ground Floor,
Bambalapittiya flats, Colombo-4.
T.P.:077 9987057

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், சகோதரி
நிரந்தர முகவரி:- தேும் வட்டாரம், மண்டைதீவு

(3822)

# ஈரானில் வலுத்துவரும் அரச எதிர்ப்பு போராட்டங்கள்



ஈரானில் ஜனாதிபதி மெஹ்மூத் அகமது நிஜாத்தின் எதிர்ப்பாளர்கள் திங்கட்கிழமை நடைபெற்ற அரசு எதிர்ப்பு ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்வலத்தைத் தடுக்க அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்ட போதும் ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டனர்.

எனவே, ஊர்வலத்தில் வந்தவர்களையும் ஊர்வலத்துக்கு வருவதற்காக வீதிகளில் வந்து கொண்டிருந்தவர்களையும் பொலிஸாரைவிட்டு மிக மூர்க்கத்தனமாக தடியடி நடத்தி காயப்படுத்தியுள்ளனர். நூற்றுக்கணக் கானவர்களைக் கைது செய்து எங்கு கொண்டு செல்கிறோம் என்று அறிவிக்காமலேயே கொண்டு போய் சிறைவைத்துள்ளனர்.

ஊர்வலத்துக்கு வருகிறவர் கள் யார் என்று அடையாளம் காண முடியாததால் சந்தேகப்பட்டவர்கள் மீது தடியடி நடத்தியுள்ளனர். வீதி ஓரங்களில் நின்று கொண்டு கைத்தொலைபேசியில் பேச முயன்றவர்கள், பொதுத் தொலைபேசி நிலையங்களில் காத்திருந்தவர்கள், பஸ்களில் பயணம் செய்த பெண்கள் என்ற எல்லோரையும் பொலிஸார் சகட்டு மேனிக்கு தடியால் அடித்து காயப்படுத்தியுள்ளனர்.

எதிர்க் கட்சித் தலைவர்கள் மீர் உசைன் மௌசாவி, மெஹ்தி கரைப்பி என்ற இரு தலைவர்களையும் சிறை வைத்த பின்னர் அவர்களுடைய ஆதரவாளர்கள் தெஹ்ரான் நகரமையப் பகுதியில் உள்ள ஆசாதி (விடுதலை) சதுக்கத்திலும் இன்குலாப் (புரட்சி) சதுக்கத்திலும் குவிந்தனர்.

தெஹ்ரான் பல்கலைக்கழ கம் அருகிலிருந்து ஏராளமானோர் இந்த இரு இடங்களுக்கும் கையில் கொடிகளுடன் கோஷமிட்டுக்கொண்டே வந்தனர். யா உசைன், மீர் உசைன் என்று கோஷமிட்டனர்.

ஈராக்கின் தலைவர் அயதுல்லா அலி கமேனியையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் விட்டு வைக்கவில்லை.

கமேனி சர்வாதிகாரத்தில் உனக்குப் பங்கு, ஊதிடுவோம் உனக்கு சங்கு என்று முழங்கினர். தடியடி நடத்தியதல்லாமல் நகருக்குள் பஸ் உள்ளிட்ட வாகனங்கள் வராமல் தடுத்து நிறுத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரின் மையப்பகுதிக்கு வராமல் தடுப்புகளை அமைத்து அதன் அருகில் பொலிஸாரை குண்டாந்தடியுடன் நிறுத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை அடிப்பதற்கு வசதியாக அந்தப் பகுதியில் மின்சார விநியோகத்தையும் நிறுத்திவிட்டனர். கைத்தொலைபேசி, தரைவழி தொலைபேசி, இணையத்தள இணைப்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

செவ்வாய்க்கிழமை ஈரானிய நாடாளுமன்றம் கூடிய போது பெருபாலான எம்.பி.க்கள் தெஹ்ரானில் திங்கட்கிழமை கூடியவர்களையும் அவர்களைக் கூட்டியவர்களையும் வாய்க்கு வந்தபடி வைதார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் கூட்டுச் சதியால்தான் இந்தக் கூட்டம் கூடியது. ஈரானின் விரோதிகள்தான் மக்கள் எழுச்சி என்ற போர்வையில் தெஹ்ரானில் கூடி கலவரத்தைத் தூண்ட முயற்சி செய்துள்ளனர்.

எகிப்து, துனிசியாவில் நடந்த ஆட்சி மாற்றத்தை வரவேற்கத்தான் ஊர்வலம் என்றார்களே. யாராவது ஒருவர் ஒரு வார்த்தையாவது அதைப்பற்றி உச்சரித்தார்களா? என்று உறுப்பினர்கள் காரசாரமாக விவாதித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர்களை வீட்டுச் சிறையில் வைத்தது போதாது. அவர்களை தேசத்துரோகச் செயல்களுக்காக அப்படியே தூக்கில் போட்டுவிட வேண்டும் என்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர். பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டை வெடித்த போது அவர்களை அருகில் வராமல் தடுக்கவும் புகையின் தன்மையை நீர்த்துப் போக வைக்கவும் வீதியிலிருந்த குப்பைக் கூடைகளையெல்லாம் அரசு எதிர்ப்பாளர்கள் எரித்தனர். இதை மிகப் பெரிய நாச வேலையாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வர்ணித்தனர்.

ஈரானில் ஜனநாயக மீட்பு யுத்தம் தொடங்கிவிட்டது. இப்போதை ஆட்சியாளர்கள் பதவியிலிருந்து இறங்கும் வரை அது ஓயாது என்பதையே இந்தச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. (ஸ்ரீ)

# எகிப்தில் அரசியல் சட்டத்தை மாற்ற எட்டுப்பேர் கொண்ட குழு அமைப்பு

எகிப்தில் 30 ஆண்டுகாலம் நடந்த ஹோஸ்னி முபாரக்கின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடந்தது. அதன் எதிரொலியாக அங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆட்சி அதிகாரம் இராணுவம் கையில் உள்ளது.

சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் போன்றவைதான் போராட்டத்தின் போது மக்களின் முக்கிய கோரிக்கைகளாக இருந்தன.

எனவே, தற்போது ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ள இராணுவ அரசு ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சியின் போது இருந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்க முடிவு செய்துள்ளது. அதற்காக 8 பேர் கொண்ட குழுவை இராணுவ உயர்மட்ட கவுன்சில் அமைத்துள்ளது.

அக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி கரிக் அல்-பிஷ்ரி நியமிக்கப்பட்டுள்ளார். நீதித்துறை சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் என முபாரக் ஆட்சியின் போது போராடியவர். மேலும் இக்குழுவில் முஸ்லிம் சகோதரத்துவ நாடுகளின் பிரதிநிதி கோபி சாலேவும் இடம்பெற்றுள்ளார். இவர் முன்னாள் எம்.பி. ஆவார்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டம் இன்னும் 10 நாட்களுக்குள் தயாரிக்கப்பட்டு விடும். அதற்கான உத்தரவை இராணுவ உயர்மட்ட கவுன்சில் பிறப்பித்துள்ளது. இந்தத் தகவல் அரச தொலைக்காட்சியில் வெளியானது. இதற்கிடையே மக்கள் போராட்டத்தின் போது அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய 2 உயர் இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி சென்னையில் தி.மு.க.கண்டன ஆர்ப்பாட்டம்

## கனிமொழி எம்.பி.உட்பட 2 ஆயிரம் பேர் கைது

(சென்னை)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்கள் 112 பேரையும் விடுவிக்கக் கோரி தி.மு.க.சார்பில் நேற்று தமிழ் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டு இருந்தது.

இதற்கமைய சென்னையில் இலங்கை தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால் பொலிஸார் அதற்கு அனுமதி வழ ங்க வில்லை.

எனவே மைலாப்பூர் லஸ் கார்னர் அருகில் உள்ள நாகேஸ்வரராவ் பூங்கா அருகே காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கனிமொழி எம்.பி. தலைமை தாங்கினார். வடசென்னை, தென் சென்னை, திருவள் ளூர் மாவட்ட தி.மு. க.வினர், மகளிர் அணியி னர் இதில் கலந்து கொண்டனர்.

அப்போது இலங்கை அரசே தமிழக மீனவர்களிடம் அத்துமீறி நடக்காதே. கைதான மீனவர்களை உடனே விடுதலை செய்.மத்திய அரசே அப்பாவி தமிழக மீனவர்களை காப்பாற்று என்று கோஷம் எழுப்பினார்கள். மீனவர்களுக்கு ஆதரவான வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் ஏந்தி வந்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது கனிமொழி எம்.பி.பேசியதாவது,

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்கி வருகிறார்கள். நேற்று முன்தினம் 106 மீனவர்களை கைது செய்துள்ளனர். எதற்கும் ஒரு எல்லை உண்டு. இனியும் இது போன்ற சம்பவங்கள் நடந்தால் எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. 106 மீனவர்கள் கைதானதை கேள்விப்பட்டதும் தி.மு.க.தலைவர் முதல் அமைச்சர் கலைஞர் மிகவும் வேதனைப்பட்டார். அவர்களை உடனே விடு தலை செய்ய நடவடிக்கை எடுக் கும்படி மத்திய அரசை வற்புறுத்தினார்.




தி.மு.க.சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் அறிவுறுத்தப்பட்டதால் பெரும் திரளாக வந்திருக்கிறோம். மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்தாவிட்டால் எங்கள் போராட்டம் தொடரும். தமிழர்களின் உணர்வை இதைவிட ஆக்ரோஷமாக வெளிப்படுத்துவோம். மீனவர் சமுதாயத்துக்கு நிச்சயம் நீதி கிடைக்க வேண்டும். இதுதான் தி.மு.க. தலைவர் கலைஞரின் எண்ணம். கைதான தமிழக மீன வர்களை இலங்கை அரசு உடனே விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு கனிமொழி பேசினார்.

அதன் பின்னர் கனிமொழி தலைமையில் தி.மு.க.வினர் ஊர்வலமாக புறப்பட்டு ஆழ்வார்பேட்டையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடுவதற்காக செல்ல முயன்றனர்.

அவர்களை நாகேஸ்வரராவ் பூங்கா அருகே பொலிஸார் தடுத்து நிறுத்தினார் கள். அதை ஏற்க மறுத்ததால் கனிமொழி உட்பட சுமார் 2 ஆயிரம் தி.மு.க.வினரை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் வான், பஸ்களில் ஏற்றப்பட்டு மந்தவெளியில் உள்ள பி.எஸ். எஸ்.பள்ளி மைதானத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஸ்ரீ-2)

# எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா பாணியில் அரசியலில் ஈடுபடுவீர்களா?

## நடிகர் ரஜினி பதில்



ரஜினி அரசியலில் ஈடுபட வேண்டும் என்று ரசிகர்கள் வற்புறுத்துகின்றனர். சில ரசிகர்கள் தன்னிச்சையாகக் கட்சிப் பெயரை அறிவித்தனர். கொடியையும் அறிமுகம் செய்தனர். அவர்களை ரசிகர் மன்றத் தலைவர் மூலம் ரஜினி கண்டித்தார். அரசியலில் ஈடுபடுவது ஆண்டவன் கையில் இருக்கிறது என்று தெளிவுபடுத் தினார். ஏற்கனவே தி.மு.க. - தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணிக்குச் சட்டமன்றத் தேர்தலில் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து அறிக்கைகள் விட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் தனது நிலையை மாற்றி பாரதீஜ ஜனதா - அ.தி.மு.க. கூட்டணியையும் ஆதரித்தார். தற்போது எந்தக் கட்சிக்கும் ஆதரவு தெரிவிக்காமல் மௌனமாய் இருக்கிறார். எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் ரஜினி ஆதரவு யாருக்கு என்று ரசிகர்கள் பரப்பாக எதிர்பார்க்கின்றனர். அவரிடம் இருந்து தகவல் வந்த பின்னர் சுட்டிக்காட்டும் கட்சிக்குத் தேர்தல் பணிகள் செய்யத் தயாராகக் காத்திருக்கின்றனர். இதற் கிடையில் டில்லியில் நேற்று முன்தினம் என். டி. டி.வி. நடத்திய சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் ரஜினி பங்கேற்றார். அவருக்கும் விருது வழங்கப்பட்டது.

விழாவில் ரஜினியிடம் சினிமாவில் நிறைய சாதித்துவிட்டீர்கள். அடுத்த கட்டமாக எம்.ஜி. ஆர்., ஜெயலலிதா பாணியில் அரசியலில் ஈடுபடுவீர்களா? என்று கேட்கப்பட்டது. இதற் குப் பதிலளித்து ரஜினி கூறும் போது, அரசியல் பற்றிக் கருத்து எதுவும் சொல்ல நான் விரும்பவில்லை என்றார்.

விருது பெற்றது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதற்குக் காரணமான கடவுளுக்கும் திரைப் படத்துறையினருக்கும் நன்றி என்று கூறினார். (ஸ்ரீ)

மனச்சாட்சியை ஏமாற்றாமல் வாழ்பவனே உண்மையான வீரன். அவனது வெற்றி உறுதியானது. —ஜேம்ஸ் கிளார்க்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# முன்னாள் புலிப் போராளிகளை பொலிஸார் கைது செய்கின்றனர்

## மட்டக்களப்பில் நடக்கிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி தற்போது குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள்பலரும்மட்டக்களப்பில்எவ்வித காரணமும் இல்லாமல் கைது செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்படும் சம்பவங்கள் படுவான்கரைப் பகுதியிலேயே பெருமளவுக்கு இடம்பெறுவதாகவும் பழிவாங்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக இது தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு உறவினர்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகி இயல்பு வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் அண்மைக் காலங்களில் சேகரித்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே இத்தகைய கைது தொடர்பான செய்திகள் வெளியாகியிருக்கின்றது. இச் சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. (ந-5)

## தமிழக மீனவர்களை பிடித்தமை புத்திசாலித்தனமான செயல் அல்ல

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த தமிழகத்து மீனவர்கள் 112 பேரை வடமராட்சி கடற்றொழிலாளர்கள் வளைத்துப்பிடித்து பருத்தித்துறைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவம் மனதிற்கு திருப்தி தருவதாக இல்லை.

ஏதோ ஒரு தவறு நடந்துவிட்டதான மனநிலை உள்ளது. அதேசமயம் 18 இழுவைப் படகுகளையும் தமிழகத்தின் 112 மீனவர்களையும் வளைத்துப்பிடித்து பருத்தித்துறைக்குக் கொண்டுவருவது என்பது சாதாரணமான விடயமன்று. ஆயுதங்கள் எதுவும் இல்லாமல் வடமராட்சி மீனவர்கள் தனித்து இவ்வாறு செய்வதென்பதும் முடியாத காரியம்.

எனவே இந் நடவடிக்கைக்கான பின்னணி வேறு என்பது புரிகின்றது. எதுவாயினும் தற்போது இருக்கக் கூடிய சூழமைவில் தமிழகத்து மீனவர்களை வடமராட்சி மீனவர்கள் பிடித்துக் கொண்டு வந்தமை,

அல்லது அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களை பிடித்துக்கொண்டு வருவது களநிலை மாற்றத்திற்கு உதவுமெனத் திட்டம் தீட்டியவர்களுக்கு உதவியமை என்ற இரு நெறிகளில் இச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மகா தவறு இழைத்துவிட்டனர்.

வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களால் எங்கள் கடற்றொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்பது உண்மை.

ஆனால் அதற்காக தமிழக மீனவர்களை பிடித்துக்கொண்டுவருவது தகுந்த நடவடிக்கையல்ல.

இத்தகைய நடவடிக்கை அத்துமீறல்களை தடுக்கப்போவதில்லை என்பதுடன், எம் தமிழினத்தின் கையறுநிலையை மேலும் பலவீனமாக்கிவிடும் என்பதே நிஜமாகும்.

தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைவதை நியாயமென்று நீங்கள் கருதுகிறீர்களா? என்ற கேள்வியை நீங்கள் எழுப்பினால், அது நியாயமில்லை என்பதே எமது பதிலாக இருக்கும்.

அதேநேரத்தில் கடல் வலயப் பாதுகாப்புச் சட்டத்தின்போது கடற்கரைப் பக்கமே போக முடியாத நிலைமைஎமக்கு இருந்ததையும்நாம்மறந்துவிடக்கூடாது.

ஆக, தமிழக மீனவர்கள் எங்களுடைய வலைகளை அறுத்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் தமிழகத்தாலும் இந்திய மத்திய அரசாலும் எங்களுக்காக ஆகவேண்டிய காரியங்கள் நிறையவே உள்ளன.

அதற்கான வழிவகைகளை எங்கள் மீது விசுவாசம் கொண்டு இந்திய மத்திய அரசு செய்யாவிடினும்,

தமிழகத்து மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் ஏற்படும் விபரீதங்களை கருத்தில் எடுத்து இந்திய மத்திய அரசு அதைச் செய்யும் என்ற நம்பிக்கையிருந்தது.

அந்த நம்பிக்கை நிஜமானதா என்பதை அறுதியிட்டு சொல்ல முடியாத போதிலும் நாங்கள் செய்த வேலையால் எல்லாம் கெட்டுப் போய்விட்டது என்று கூறும் அளவிற்கு நேற்று முன்தினம் நடந்த சம்பவம் காரணமாயிற்று. என்ன செய்வது! எங்களை வழிப்படுத்த யாருமே இல்லை. அந்தக் கும்பிடுவான்களை தேர்தல் காலங்களில்தானே காணலாம்.

நெய்திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்து போகின்ற எங்கள் தலைவிதி எப்போதுதான் மாறுமோ தெரியவில்லை.

## நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மூன்று வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மூன்று வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்படவுள்ளன.

இப்புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கல்வியங்காடு ஆடியபாதம் வீதி, கோண்டாவில் இருபாலை வீதி, மானிப்பாய் மற்றும் இணுவில் அன்னங்கை வீதி ஆகிய மூன்று வீதிகளும் 10 மீற்றர் அகலமாக புனரமைக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-51)

## குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு கடனுதவி

### சமுர்த்தி பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை முன்னெடுத்த 10 இலட்சம் கிராமிய பொருளாதார வேலைத் திட்டம் தற்போது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாகச் சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

நாடு முழுவதிலுமுள்ள சமுர்த்தி வங்கிகளில் சமுர்த்தியாளர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் நிவாரண வட்டி அடிப்படையில் கடன் உதவிகள் வழங்கப்படுகின்றன.

புத்தளவில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான 8 சதவீத வட்டி அடிப்படையில் கடன் வழங்கப்பட்டது. அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சமுர்த்தியாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவில் ஒரு பகுதி அவர்களது சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு சேமிப்புக் கணக்குகள் இவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

திரியபியச வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள சமுர்த்தியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

சமுர்த்தி நிவாரணங்களைப் பெற்றுக் கொண்ட வர்களுக்கு இவ்வருடத்திலும் கொடுப்பனவு வழங்கப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-9)

## கிரிக்கெட்போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான இரு பாலாருக்குமான கிரிக்கெட்போட்டி இரு பிரிவுகளாக நடை பெறவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு மாலுசந்தி மைக்கல் விளை யாட்டுக்கழக மைதானம் மற்றும் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழக மைதானங்களில் நடைபெறவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க பணிமனை பிரிவிற்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக்கழகங்களுக்கு இடையி லான இருபாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை 20ஆம் திகதியும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஆழியவளை விளையாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளதாக வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.லிங்கநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாணவர்களின் கல்வி விருத்திக்கான பாத பூஜை பிரார்த்தனை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

எனவே மாணவர்களையும் அடியார்களையும் கலந்துகொண்டு அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-2)

## ஆன்மீகமே மன அமைதி தரும் - பாபா

மனித வாழ்க்கை என்பது தேகம், மனம், ஆன்மா ஆகியவற்றின் கூட்டமைப்பே. ஆகவே, உடலை தர்மம், நீதி தவிர்ந்த அநீதியானவற்றிற்கு பயன்படுத்தக் கூடாது. புனிதமான செயல்களில் ஈடுபடுத்த வேண்டும். காரணம் ஆத்மா எப்போதும் தூய்மையானதாகவும், மாசற்றதாகவும் விளங்குகிறது.

மனிதப் பிறவி என்பது கிடைத்தற்கரியது. இம்மனித சரீரத்தினால்தான் தர்மத்திற்குட்பட்ட செயல்களைச் செய்ய முடியும். சத்யம்,தர்மம், சாந்தி, அன்பு என்பன எம் மூலவுருவிலிருந்தே உருவாகியது. அவைகளை நாம் விலக்கி கொள்வதனால் அவை மறந்தவையாகின்றன. மனித உயர் குணநலன்களை நடைமுறைப்படுத்தாததால் தான் இன்று மனிதத்துவம் அடியோடு அருகி விட்டது. சுயநலத்துடன் கூடிய செயற்பாடு ஒவ்வொருவரிடமும் வெளித்தோன்றி நிற்கிறது. வன்மம் தலைதூக்கி தர்மம் தலை தாழ்ந்து விட்டது.

இரக்கத்தினால் இளக வேண்டிய மனித இதயம் இளகா இரும்பாகிவிட்டது. எம்முள் இரக்க சுபாவம் இருக்கையில் தான், இறைவன் அதனுள் வசிக்க தலைப்படுகிறார். அவ்வேளையில் தான் நாம் அச்சமற்ற நிச்சயமான வாழ்க்கை வாழலாம்.

இறைவனை வணங்குவதாக நினைத்தபடி அவர் புகழ் பாடுவதோ, பேசுவதோ, தர்க்கிப்பதோ செய்கிறோம் தான். ஆனால் இறைவனுக்காக வாழ்வது என்பதுதான் முடியாத காரியமாகிறது. சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு போன்றுதான் மாயையும் எம்மையே பீடித்து நிற்கிறது. இதனால் தான் பகவானே பகர்கிறார். இறைவனை நோக்கியே இருந்து கொள். சூரியனை நோக்கி நீ நின்றாயானால் உனது பின்புறம் நிழல் விழுவது போல் மாயையும் மறைந்து விடும்.

கலியுகத்தின் தன்மையோ, என்னவோ மனிதன் பேண வேண்டியதை பேணாது, பேண வேண்டாதவற்றை பேணும்படி செய்கிறது. பணம் ஈட்டும் ஆசையினால் உலகியல் கல்வியே பிரதானம் என்றவாறு இப்போது வாழ்ந்துவருகின்றனர். Start Early;Drive Sloaly; Reach Safely. இளமையிற் கற்பதே முதுமையில் பிரகாசிக்கும். அதிக செல்வம் அடங்கா மையையும் அகங்காரத்தையும் தான் கொடுக்கும். தீய வழிக்கே இட்டுச் செல்லும் பணம், பொருள் எல்லா வகை சுகங்களையும் தரலாம். ஆனால் மன அமைதியை தரமுடியாது. அது ஆன்மீக வழியினால் மட்டுமே முடிகிறது.



யாதவன்

ஜெய் சாய்ராம்

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## மேற்கிந்தியத் தீவுகள் அணி

## ஆதிக்கம் செலுத்துமா?

1975, 1979ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத் தொடரைக் கைப்பற்றிய அணி மேற்கிந்தியத் தீவுகள்.

1983ஆம் ஆண்டு இந்திய அணியிடம் உலகக் கிண்ணத்தைப் பறிகொடுத்தது. அதன்பின்னர் உலகக் கிண்ணம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு கனவாக மாறி விட்டது.

தற்போது முதன்முறையாக புதிய உத்வேத்துடன் உலகக் கிண் ணத் தொடரில் குதித்துள்ளது.

அனைவருக்கும் தெரிந்த கிறிஸ் ஹயில் நீக்கப்பட்டு, யாருக்கும் தெரியாத டரன்சமி அணித்தலை வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை மூன்று ஆட்டங்க ளில் மட்டுமே அணித்தலைவராக பயிற்சி எடுத்துள்ளார். அணியில் பலருக்கு இது முதல் உலகக் கிண்ண தொடர்தான்.


இருப்பினும் மிரட்டக் கூடிய அணியாக மேற்கிந்தியத் தீவுகள் அணி உள்ளது. அதிரடிக்கு பிரவோ சகோதரர்கள், சரவெடிக்கு பொல லார்ட், மிரட்டலுக்கு ஹயில், அனு பவ ஆட்டத்திற்கு சந்தர்போல் என கலக்கல் அணி மேற்கிந்தியத் தீவுகள்.

பந்துவீச்சிலும் ரோச், பென், மில்லர் என ஒரு பட்டாளம். பல ருக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி யின் தற்போதைய பலம் தெரியாது. இலங்கை அணிக்கு தெரியும்.

பொல்லார், பிரவோ சகோதரர் கள், ஹயில், சந்தர்போல், சர்வா னுக்கு இந்திய மைதானங்கள் நல்ல பழக்கமாம்.

உபயம் ஐ.பி.எல். ஆட்டங்கள். ஆனால் இவர்களது விளாசல் திறன் வேறு யாருக்கும் தெரியாது.

மொத்தத்தில் இந்த உலகக் கிண்ண தொடரில் மற்ற அணிகளு க்கு கஷ்டத்தை கொடுக்கும் அணி மேற்கிந்தியத் தீவு கள் என்பது நிச் சயம்.




அணித்தலைவர்- டரன் சமி
2010 - 2011

| | |
|---|---|
| ஆட்டம் | -03 |
| வெற்றி | -00 |
| தோல்வி | -02 |
| முடிபில்லை | -01 |

**பலம்** அபாயகரமான துடுப்பாட்ட வீரர்கள், அனல் பறக்கும் பந்து வீச்சாளர்கள்.

**பலவீனம்** புதுமுக அணித்தலைவர், அனுபவமில்லாத வீரர்கள்


மிரட்டலுக்கு



ஹயில்

அதிரடிக்கு






பிரவோ சகோதரர்கள்

சரவெடிக்கு




பொல்லார்ட்

சுழலுக்கு



பென்

வேகத்திற்கு




ரோச்

## கத்துக்குட்டி அணிகள்

உலகக் கிண்ண தொடரில் சில கத்துக்குட்டி அணி கள் எப்போதும் இடம்பெற்றிருக்கும் பெரிய அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேற புள்ளிகள் அடிப்படை யில் கத்துக்குட்டி அணிகள் உதவும்.

சில சமயங்களில் எதிர்பாராத வெற்றி பெற்று பெரிய அணிகளுக்கு தடைபோடும். இவ்வாறு இந்த உலகக் கிண்ணத் தொடரில் கனடா, அயர்லாந்து , நெர்தலாந்து கென்ய அணிகள் இடம்பிடித்துள்ளன.



**ஜிம்டி காமன்டே**


1996 ஆம் ஆண்டு முதல் முறையாக கென்யா உலகக் கிண்ணத் தொட ரில் விளையாடியது. ஒரே யொரு வெற்றி. 1999 ஆம் ஆண்டு ஐந்து ஆட்டங் களில்விளையாடி அனைத் திலும் தோல்வி.

2003இல் 9ஆட்டங் களில் விளையாடி 4 வெற்றி, 5 தோல்வி. இந்தத் தொடரில் முன்னணி அணிகளின் முன்னேற்றத்தை கென்யா தடுத்து நிறுத்தி அரையிறுதிக்கு முன் னேறியது.

2007இல் 3 ஆட்டங்களில் விளையாடி 1 வெற்றி, 2 தோல்விகளுடன் வெளியேறியது. இந்தமுறை சாதிக்கும் கனவுடன் கென்யா களமிறங்கவுள்ளது.

ஏடாயோ, ஏபுயா. டிக்காலோ, ஒயுமா இப்படி நல்ல வீரர்களுக்கு கமாண்டே அணித்தலைவர். களத்த டுப்பு ஜாம்பவான் ஜொண்டி ரோட்ஸ் (தென்னாபிரிக்கா) வேறு களத்தடுப்பு பயிற்சி அளிக்கிறார்.

**கனடா**
**ஆஷிஸ் பாகாய்**




இது ஒரு ஐ.நா. அணி. அணித்தலைவர் ஆஷிஸ் பாகாய்தான் தனது அணியை இப்படி அறிமு கப்படுத்திக் கொண்டார்.

இவர் டில்லியைச் சேர்ந் தவர். இலங்கை வீரர் ஒருவர் மற்றும் பாகிஸ்தான் வீரர்கள் மூன்று பேர் உள்ளனர். இப்படி பல நாடுகளில் இருந்து தேர்ந் தெடுத்து ஒரு அணியாக உலகக் கிண்ணத் தொடருக்கு வந்துள்ளார்கள். 1979ஆம்ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் 3 ஆட்டங்களில் விளையாடி அனைத்திலும் தோல்வி.

2003 இல் 6 ஆட்டங்களில் விளையாடி ஒரு வெற்றி, 5 தோல்வி. 2007 இல் 3 ஆட்டத்திலும் தோல்வி கண்டு வெளியேறியது.


இம்முறை ஒரு ஆட்டத்திலாவது எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்கிறார் அணித்தலைவர் ஆஷிஸ் பாகாய்.

**அயர்லாந்து**
**போட்டர் பீல்ட்**



கடந்த 2007ஆம் ஆண்டு உலகக் கிண் ணத் தொடரில்தான் அயர்லாந்து களமிறங்கி யது. தரமான பந்துவீச்சு, கலக்கல் களத்தடுப்பு, சுமாரான துடுப்பாட்டம் இதுதான் அயர்லாந்து.

**நெதர்லாந்து**
**பீற்றர் போரன்**



மூன்று உலகக் கிண் ணத் தொடர்களைக் கண்ட அணி. 1996இல் 5 ஆட் டங்களிலும் தோல்வி.

2003இல் 6ஆட்ட கங்களில் ஒரு வெற்றி, ஐந்து தோல்வி. 2007 இல் 3 ஆட்டங்களில் ஒன்றில் வெற்றி, 2இல் தோல்வி.

இந்தமுறை பீற்றர் போரன் தலைமையில் வந்தி ருக்கிறது சாதிக்க. வெற்றிக் கணக்கை அதிகரிக்க ஆசைதான்.

## தெரியுமா?



சச்சின் டெண்டுல்கர் முதல் முறையாக 1992 ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரில் களமி றங்கினார் என்பது தெரி யும்.

ஆனால் அதற்கு முதல் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் டெண்டுல்கர் மைதானத் திற்குள் காலடி எடுத்து வைத்து விட்டார்.

அது எப்போது தெரியுமா? 1987 ஆம் ஆண்டு. அப்போது மும்பை வான்கடே மைதா னத்தில் இந்திய-சிம்பாவே அணிகளுக்கிடையிலான ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. இந்த ஆட்டத்தின் போது டெண்டுல்கர் எல்லைக் கோட்டிற்கு வெளியே நின்று பந்து பொறுக்கி போடும் சிறுவனாக இருந்தார்.



இந்திய அணிக்காக நான் 1996 ஆம் ஆண்டு அறிமுக மானேன். இப்போது உலகின் முன்னணி துடுப் பாட்ட வீரர்களின் ஒரு வராக இருக்கிறேன். நெருக்கடியான நேரத் தில் இந்திய அணியை வெற்றிக்கு அழை த்துச் சென்றிருக் கிறேன்.

ஆனால் இது வரை எந்த ஒரு உலகக் கிண்ண தொடரிலும் விளையா டிய தில்லை.

நான் யார் தெரியுமா?

இப்படி புதிர் போடுவது வேறுயாருமில்லை. டெஸ் துடுப்பாட்ட நிபுணர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் தான்.

## சாதிப்பாரா பொண்டிங்

உலகக் கிண்ண வரலாற்றில் அவுஸ்திரேலிய அணி அதிகபட் சமாக நான்கு முறை (1987, 1999,2003, 2007) கிண்ணத்தை கைப்பற்றி சாதித்துள்ளது. இதில் ரிக்கி பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து இரண்டுமுறை (2003, 2007) சம் பியன் ஆகியுள்ளது.

இம்முறை பொன்டிங் தலைமை யில் களமிறங்கும் அவுஸ்திரேலிய அணி கிண்ணத்தை வெல்லும் பட்சத்தில் உலகக் கிண்ண அரங் கில் ஹட்ரிக் உலகக் கிண்ணம் வென்று தந்த முதல் தலைவர் என்ற புதிய வரலாறு படைக்கலாம்.

தவிர உலகக் கிண்ண அரங் கில் பொன்டிங் நிறைய சாதனை கள் படைத்துள்ளார். இவரது தலை மையிலான அவுஸ்திரேலிய அணி 100 சதவீத வெற்றி பெற் றுள்ளது. 22 போட்டிகளுக்கு அணித்தலை வராகச் செயற்பட்டு அனைத்திலும் வெற்றி பெற்றுத் தந்துள்ளார். உல கக் கிண்ணத் தொடரில் அதிக போட்டியில் (39 போட்டி) விளையாடி உள்ள பெருமையை சக வீரர் மெக் ராத்துடன்பகிர்ந்து கொண்டுள்ளார். அதிக பிடி (25) பிடித்த வீரர்கள் வரிசையில் முன் நிலை வகிக்கிறார்.

அதிக சதம் (4) கடந்த வீரர்கள் வரிசையில் முதல் இடத்தை சச் சின் (இந்தியா), கங்குலி (இந்தியா), மார்க்வோ (ஆஸி) ஆகியோருடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அதிக ஓட்டங்கள் சேர்த்த வீரர் கள் பட்டியலில் 2ஆவது இடத்தில் இருக்கும் இவர் (1537 ஓட்டங்கள்) இம்முறை அபார ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் முதலி டத்தில் உள்ள சச்சினை (1796 ஓட்டங்கள்) முந்த வாய்ப்பு உள்ளது.

ஐந்தாவது (1996-2011) முறையாக உலகக் கிண்ணத் தொடரில் பங் கேற்கவுள்ள இவருக்கு இத் தொடர் கடைசி வாய்ப்பாக அமையலாம்.

# பங்களாதேஷில் இன்று கோலாகல ஆரம்பவிழா


பங்கபந்து தேசிய விளையாட்டு மைதானம்

(டாக்கா)

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆரம்ப விழா இன்று டாக்காவில் நடக்கிறது. இரண்டே கால் மணி நேரம் நடக்கும் கலை நிகழ்ச்சிகள் இரசிகர்களுக்கு சிறந்த விருந்தாக அமையவுள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் இணைந்து பத்தாவது உலகக்கிண்ண தொடரை நடத்துகின்றன. போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது.

இதன் ஆரம்ப விழா இன்று பங்களாதேஷின் பங்கபந்து தேசிய விளையாட்டு மைதானத்தில் பிரமாண்டமாக நடக்கிறது.

பங்களாதேஷ் சுதந்திரமடைந்த பின் நடக்கும் மெகா விளையாட்டுத் தொடர் என்பதால் உலகத்தின் கவனத்தை தன்பக்கம் ஈர்க்க இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்த தீர்மானித்துள்ளது. 135 நிமிடங்கள் நடக்கும் ஆரம்ப விழா நிகழ்ச்சிகள் இன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள இந்த விழாவில் பிரபல பாடகர் பிரயான் அடம்ஸ், இந்தியப்பாடகர் சோனு நிகாம் போன்றவர்கள் பங்கேற்கின்றனர்.

அதற்கு முன்பாக மாலை 4 மணிக்கு 8 முன்னணி பங்களாதேஷ் பாடகர்கள் பங்கேற்கும் 50 நிமிட நிகழ்ச்சி நடக்கவுள்ளது. இதில் பிரபல இசை கலைஞர்கள் ருணா லைலா, சபீனா யாஷ்மின், கிராமிய பாடகர் மும்தாஜ் பேகம் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஷங்கர், ஈசான், லாய் என்ற மூன்று இந்திய இசையமைப்பாளர்கள் இணைந்து 10ஆவது உலகக் கோப்பை தொடரின் தீம் பாடலை இந்திய, இலங்கை, பங்களாதேஷ் மொழிகளில் அறிமுகம் செய்கின்றனர்.

இதற்குப் பின் 14 நாடுகள் பங்கேற்கும் 42 நாட்கள் நடக்கும் கிரிக்கெட் தொடரை பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசீனா முறைப்படி அறிவித்து ஆரம்பித்துவைக்கிறார்.

அடுத்து பங்களாதேஷ் நிதி அமைச்சர் முகித், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆசாத் அலி சர்கார், சர்வதேச கிரிக்கெட் சபைத்தலைவர் சரத்பவார், பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அடுத்து அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் 14 அணியின் தலைவர்களும், மைதானத்திற்குள் அழைத்து வரப்படுவார்கள். பின்மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள பங்களாதேஷின் தந்தை முஜிபுர் ரஹ்மானின் இராட்சத உருவப்படத்தை பிரதமர் ஷேக் ஹசீனா திறந்துவைக்கிறார்.

இதில் ஒவ்வொரு நாட்டிற்கும் தங்களது கலாசாரம், மரபு வழி கீரோக்களை வெளிப்படுத்த குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் பங்களாதேஷிற்கு 20 நிமிடம் தரப்பட்டுள்ளது. இதில் 1952 இல் நடந்த மொழி இயக்கம், 1971 இல் நடந்த விடுதலைப் போராட்டம் உள்ளிட்ட பல வரலாற்று நிகழ்வுகள் தொகுக்கப்பட்டு நிகழ்ச்சிகளாக நடத்தப்படுகின்றன.

தவிர இந்தியா, இலங்கைக்கு தலா 12 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன. அதன்பின் கண்ணை கவரும் வகையிலான லேசர்ஷோ வாணவேடிக்கைகள் நடக்கும்.

ஆரம்பவிழாவில் கல்லூரிகளைச்சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவர்கள், 3 ஆயிரத்து 500 இராணுவ வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இவை அனைத்தும் பிரபல இந்திய நடனக்கலைஞர் சந்தோஸ் சேட்ஜி தலைமையில் நடக்கிறது.

## தோனி அதிரடி சதம் இந்திய அணி வெற்றி

உலகக் கிண்ண பயிற்சி போட்டியில் தோனியின் அதிரடிச் சதம் கை கொடுக்க நியூசிலாந்தை 117 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வீழ்த்தியது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. இதற்கு முன்னதாக பயிற்சி போட்டிகள் நடக்கின்றன. நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த பயிற்சி போட்டியில் இந்தியா-நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். ஆரம்ப வீரராக வந்த சச்சின் அதிக நேரம் நீடிக்கவில்லை. 3 பவுண்டரிகள் அடித்த இவர் 17ஓட்டங்களுக்கு சவுத்தி பந்தில் போல்டானார்.

சிறிது நேரத்தில் ஜேக்கம் ஓரம் வேகத்தில் சேவாக் (23) வெளியேறினார். பின் காம்பீர், விராத் கோலி இணைந்து அசத்தலாக ஆடினர்.

மூன்றாவது விக்கெட்டுக்கு 106 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் கோலி (59) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் தோனி சிறப்பாக ஆட மறு முனையில் காம்பீரும் தனது அசத்தல் ஆட்டத்தை தொடர்ந்தார். சவுத்தி ஓவரில் ஹட்ரிக் பவுண்டரி அடித்த காம்பீர் 89ஓட்டங்களை எடுத்தார். கடைசி கட்டத்தில் ரெய்னா மற்றும் தோனி சேர்ந்து நியூசிலாந்து பந்துவீச்சை சிதறடித்தனர்.

ஓரம் வீசிய போட்டியின் 43வது ஓவரில் தோனி வரிசையாக 5பவுண்டரிகள் விளாசினார். 40 பந்துகளில் அரைசதம் கடந்த தோனி மக்கலம் வீசிய அடுத்த ஓவரிலும் இரண்டு பவுண்டரி அடித்தார். ஓரம் வீசிய 43வது ஓவரில் ரெய்னா தன் பங்குக்கு 3 இமாலய சிக்சர்கள் அடித்தார்.

அரைசதம் அடித்த ரெய்னா (50), மில்ஸ் பந்தில் வீழ்ந்தார். தனது கலக்கல் ஆட்டத்தை தொடர்ந்த தோனி மின்னல் வேக சதம் அடித்தார். இந்திய அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 360 ஓட்டங்களை எடுத்தது. தோனி 64பந்துகளில் 108 (11பவுண்டரி,3சிக்ஸர்), யூசுப் பதான் 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த னர்.

அடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு பிரண்டன் மெக்கலம், குப்தில் இணைந்து நல்ல ஆரம்பம் தந்தனர். முதல்விக்கெட்டுக்கு 94 ஓட்டங்கள்சேர்த்த நிலையில் அஷ்வின் சுழலில் குப்தில் (38) ரன் அவுட்டானார்.

இதற்கு பின் இந்திய சுழல் வீரர்கள் அசத்த நியூசிலாந்தின் விக்கெட்டுக்கள் வரிசையாக சரிந்தன. ஹர்பஜன் பந்தில் அணித்தலைவர் ரோஸ் ரெய்லர் (5) காலியானார்.

சாவ்லா வலையில் பிராங்கிளின் (0), ஸ்ரைரிஸ் (20) சிக்கினர். யுவராஜ் சுழலில் ஹவ் (15), ஓரம் (12) வீழ்ந்தனர்.

நியூசிலாந்து அணி 43.1 ஓவரில் 243 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையுமிழந்து தோல்வி அடைந்தது.

## தொடக்க வீரராகவே சச்சின் விளையாடுவார்

(சென்னை)

எந்த சூழ்நிலையிலும் தொடக்க வீரராக மட்டுமே சச்சின் விளையாடுவார் என்று இந்திய அணித்தலைவர் தோனி கூறியுள்ளார். இது குறித்து தோனி கூறியதாவது,

பங்களாதேஷிற்கு எதிரான தொடக்க போட்டியில் சகீர்கான் விளையாடுவார். துடுப்பாட்டம், வேகப்பந்து வீச்சு, சுழற்பந்து வீச்சு ஆகிய 3 பிரிவுகளிலும் இந்திய அணி சிறப்பாக உள்ளது. யாரை தேர்வு செய்வது என்ற அளவிற்கு எல்லா வீரர்களும் முழு தகுதியோடு உள்ளனர். ஆடுகளத்தை பொறுத்து வீரர்கள் தேர்வு செய்யப்படுவர்.

அவுஸ்திரேலிய அணிக்குஎதிரான பயிற்சிப் போட்டியில் துடுப்பாட்டம் சொதப்பிய போதும் சுழற்பந்து வீச்சாளர்கள் அணிக்கு வெற்றி தேடித்தந்தனர். குறிப்பாக பியூஷ் சாவ்லா பந்து வீச்சு அபாரமாக இருந்தது.

கடந்த சில போட்டிகளாக மத்திய வரிசை ஆட்டக்காரர்கள் சிறப்பாக விளையாட வில்லை. அவர்கள் கவனத்துடன் விளையாடி அதிக ஓட்டங்களைக்குவிப்பார்கள்என்றுநம்புகிறேன்.

பந்து வீச்சாளர்களும் சிறப்பாக துடுப்பாட்டம் செய்வது மகிழ்ச்சியளிக்கிறது. அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான வெற்றி மனரீதியில் வீரர்களை வலுப்படுத்தி உள்ளது.

எந்த சூழ் நிலையிலும் தொடக்க வீரராக மட்டுமே சச்சின் களம் இறங்குவார். எப்போதுமே சச்சின் நம்பர்-1 என்றார்.

## செல்போனுக்கு தடை


10ஆவது உலகக்கிண்ணகிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நாளை மறுதினம் முதல் ஏப்ரல் 2ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை பார்க்க வரும் ரசிகர்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளன. செல்போன், பைனாகுலர், லப்டொப் உள்ளிட்ட எலக்ட்ரோனிக் பொருட்களை மைதானத்திற்குள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் இசைக் கருவிகளுக்கும் அனுமதி கிடையாது. விளம்பர சின்னங்கள் பொறிக்கப்பட்ட பனியன்களை அணிந்து வரக் கூடாது. தண்ணீர் போத்தல்களை எடுத்து வரக்கூடாது என்றும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


ராமநாதபுரம் மாவட்டம் சேதுக்கரை கடலில் ஆஸி., கிரிக்கெட் அணி தோற்க வலியுறுத்தி இந்திய ரசிகர்கள் சிறப்பு யாகபூஜை செய்தனர்.

# கோண்டாவில் காளி அம்மனுக்கு பைபர்கிளாஸில் தேர்


படம்:- ஜசி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நேற்று இரவு 7.00 மணிக்கு நடைபெற்றது.

சென்னை ஸ்ரீ லோகேஸ் இன்ரநஷனல் நிறுவன சிற்பாசாரி பாலகுமார சர்மாவின் கைவண்ணத்தில் இந்தியாவில் உருவாக்கப்பட்ட தேர்ப் பாகங்கள் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டன.

30இலட்சம் இந்திய ரூபாயில் உருவாக்கப்பட்ட இத் தேரின் பீடம் மற்றும் சில்லுகள் தவிர்ந்த ஏனைய பாகங்கள் பைபர் கிளாஸ் என்னும் கண்ணாடி இழைநாரினால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தேர் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத் தேர்த்திருவிழா இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். (ந)

# இலங்கை விமானப்படையின் விழாவில் இந்திய விமானங்கள் பங்கேற்கக்கூடாது

## வைகோ கடிதம்

இலங்கை விமானப் படையின் ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் இந்திய விமானப்படை பங்கேற்றக் கூடாது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை விமானப் படையின் ஆண்டு விழாவில் இந்தியப் போர் விமானங்கள் கலந்துகொள்ளவுள்ளதாக கடந்த 15ஆம் திகதி கொழும்புப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அடுத்தே அவர் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு இக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செய்தித் தாளில் இடம்பெற்றுள்ள செய்தியின் அடிப்படையில் இலங்கை விமானப்படை தனது 16வது ஆண்டு நிறைவை வருகின்ற மார்ச் மாதம் கொண்டாடவுள்ளது என்றும் அந் நிகழ்ச்சியில் நமது இந்திய விமானப் படை தனது அணி வரிசையின் உச்ச நிலையிலுள்ள சுகாய் போர் விமானங்களை கொழும்பில் நடைபெறும் விமானப்படைக் கொண்டாட்டத்தில் வான் வெளி சாகசத்தில் ஈடுபடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அறிகிறேன். எனவே இந்திய விமானப் படையின் இம் முயற்சியை உடன் நிறுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## தமிழக மீனவர்கள் 112...

துறை ஆதார வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்காக பருத்தித்துறைப் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் தமிழகமீனவர்கள் அனைவரையும் பொலிஸார் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி, தமிழக மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை தமிழக மீனவர்களின் நிலை தொடர்பில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்ட யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம்,

தமிழக மீனவர்கள் தொடர்பில் அவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட நடவடிக்கையின் பின்னர் அனைவரும் நாட்டிற்கு பத்திரமாக அனுப்பிவைக்கப் படுவர் எனவும் தெரிவித்தார். (ந-5)

## டெங்குக் காய்ச...

சென்றவேளை மயங்கி விழுந்த பிரஸ்தாப மாணவனை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பயனளிக்காததால் துஷாந் நேற்றுக் காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இம் மாணவன் டெங்குக் காய்ச்சலிலேயே உயிரிழந்தார் என யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5,24)

## யாழில் வேட்...

இந்தத் தீர்மானமானது சட்டத்திற்கு மாறானது என மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ந-5)

## இலங்கை கட...

இதேவேளை பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்கள் 112 பேரையும் அவர்களின் 18 இழுவைப் படகுகளையும் வடமராட்சி கடற்தொழிலாளர்கள் மடக்கிப் பிடித்து பருத்தித்துறைக்குக் கொண்டுவந்ததாக இங்கு செய்திகள் வெளியாகியுள்ள போதிலும், இலங்கைக் கடற்படையினரே தமிழக மீனவர்களைக் கைதுசெய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட விவகாரம் இந்திய மத்திய அரசை ஆத்திரமடையச் செய்துள்ளதாகவும்,

இச் சம்பவம் இலங்கை - இந்திய உறவைப் பாதிக்கும் என்றும் இந்திய இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

## நாட்டில் அரச பயங்கர...

மறைந்த விஜயகுமாரதுங்கவின் நினைவுதின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், நானும் விஜய குமாரதுங்கவும் அன்று தொடக்கம் ஜே.வி.பியினரின் பயங்கரவாதத்தை மட்டுமன்றி அரச பயங்கரவாதத்தையும் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளோம்.

இன்றைய நிலையில் இலங்கையின் அரசியல் நிலைவரம் பற்றி விஜய குமாரதுங்க கண்ணுற்றிருப்பாராக இருந்தால் அவர் பெரிதும் மனம் வருந்தியிருப்பார். அந்த அளவுக்கு அரச அடக்குமுறையும் அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. நானும் என் கணவரும் இந்த நாட்டின் நலனுக்காக மேற்கொண்ட பல செயற்றிட்டங்கள் இன்று தலைகீழாகப் புரட்டப்பட்டுள்ளன என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (ந-5)

## தமிழகத்தில்...

வதற்கு அவசியமான விடங்கள் போன்றவை குறித்த அறிக்கையை சம்பந்தப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர்களிடம் கோரியுள்ளதாகவும் லத்திகா சரண் கூறினார். (ந-5)

## பிரபல சிங்...

பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

வீட்டில் தனியாக இருந்தபோது வயர்கோட் ஒன்றைப் பயன்படுத்தி இக் கொலை நடந்துள்ளது.

மமய் பிரியே ஆதரே, சிங்க தெவ்துவ போன்ற திரைப்படங்களில் வினு வெத்தமுனி முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். (ந-5)

## மீனவர் கை...

கள் தொடந்து தாக்குதலுக்குள்ளாவதும் கைதுசெய்யப்படுவதும் நிறுத்தப்படவேண்டும். இந்திய அரசு தொடர்ந்துவலியுறுத்தியும் இத்தகைய சம்பவங்கள் தொடர்கின்றன. எனவே தான் இந்தப் போராட்டம் என்றார்.

இதேவேளை பல எதிர்க்கட்சித் தலைவர்களும் மீனவர் சிறைப் பிடிப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். (விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்). (ந-5)

March/April INTAKE

European College of higher Studies

வழங்கும்

இறுதி சந்தர்ப்பம்

★ UKகல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை மிக இலகுவாக சென்றடைய

- யாழ் நகரில் காரியாலயம்
- Student Visa 3 1/2 வருட உத்தரவாதம்
- Course Fees குறைந்த விலையில்
- 20hr /10hr வேலைவாய்ப்பு
- நம்பகமான ஒரு மாதகால இடைவெளியில் 20க்கு மேற்பட்ட மாணவர்களை அனுப்பிய சாதனை (ஆதாரத்துடன்)
- 20க்கு மேற்பட்ட கல்லூரிகளின் தொடர்பு
- நம்பிக்கை மிக்க சேவை
- வீசாக்கு பிந்திய முற்றான கட்டணம்.

(3830)

தொடர்புகளுக்கு:

European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,
Palaly Road,Jaffna.
Tel: 077 6327623 ,021 3734747

STUDYING UK

March - April 2011 Intake

மார்ச் ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் கல்லூரிக்கு மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திகொள்ளுங்கள்

STUDENT VISA

ENGLAND

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்
மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.
IELTS தேவையில்லை, விசேட ஆங்கில வகுப்புக்களுமுண்டு.
Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இலவசம்.
பகுதி நேர வேலைவாய்ப்பு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

கடைசியாக சென்றவர்களில் சிலர்:

S. Keerthiya, Urumpirai West, Urumpirai.
Mr. Lavakumaran, Wellvattithurai, Jaffna
V. Vijitharan, Pointpedro, Jaffna
A.Senthuran, Batticolla
Dinojkumar, Trincomalee
Vinson Amalathas, Pointpedro, Jaffna
T. Kiruthikka, Kanthamadam, Jaffna
A.J.Jackshan, Kilinochi
Jonis Amalraj, Pointpedro, Jaffna
Mr. Aron Thusanth, Pointpedro, Jaffna
R. Sanjeevan, Achuveli, Jaffna
Asker Ali, Main Street, Sammanthurai
V.Pushpakumar, Delf - Jaffna
Mr. A. Ravi, Nallur, Jaffna
Miss. Bavatharani, Chavakacheri, Jaffna
T.Asok Kumar, Adyapatham, Jaffna
R.Dinesh, KKS Road, Jaffna
Mr. Vikneswaran, Wattala, Colombo
Mr. Skywin, Batticolla
J.I. Niroshini, Kokilay, Jaffna

WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIE
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
0213207778 - 0755195254 - 0771919192.

1 வார கணினி பாடநெறிகள்

| ஆரம்பம்- 20.02.11 (1 வகுப்பில் 8 மாணவர்கள்) | |
|---|---|
| Dip. in Office Applications | 2000/= |
| Dip. in Web Development | 2000/= |
| Dip. in Desktop Publishing | 2000/= |

ஏனைய பாடநெறிகள்

| ஆரம்பம்- 19.02.11 (1 வகுப்பில் 8 மாணவர்கள்) | |
|---|---|
| Computerized Accounting | 4000/= |
| Dip. in Information Tech. | 5000/= |
| A/Dip. Linux Administration | 9000/= |
| A/Dip. Computer Networking | 9000/= |

ICT-திங்கள் (3-5pm) | GIT-வியாழன் (3-5pm)

C++/Java/Joomla!/SPSS/PHP&MySQL/Flash

20.2.2011 (9.00-12.00am) :- Free Seminar on E-Mail & Internet and Tamil Computing

Jet Motors, KKS Road
Chunnakam.
021 4908063, 077 4290506
www.theictm.com

THE INSTITUTE OF ICTM

STUDY IN UK

யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய இறுதிச் சந்தர்ப்பம்

மொத்தச் செலவு 7 லட்சம் மட்டுமே

0 மிக விரைவான சேவை
0 IELTS இன்றி O/L தகைமையுடன் செல்ல ஓர் அரிய இறுதி வாய்ப்பு
0 நீங்கள் வழங்கும் சகல பணத்துக்கும் அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும்.
0 யாழ். மாணவர்களுக்காக யாழில் உள்ளவரால் நேரடியாகச் செய்யப்படும் நம்பிக்கையான திருப்தி மிக்க சேவை
0 A.Grade கல்லூரிகளிடமிருந்து நேரடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

MAR/ APR INTAKE

இரு வாரங்களில் VFS இல் ஆவணங்கள் கையளிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

➤ கல்லூரிக் கட்டணம் 1500 (ஸ்ரேலிங் பவுண்ஸ்) மட்டுமே...!
➤ நாம் குறிப்பிடும் காலத்தினுள் நீங்கள் U.K செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தினையும் மீளப் பெறலாம்.
➤ அனுபவமற்ற முகவர்கள் வழங்கும் போலி வாக்குறுதிகளை நம்பி அரிய இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

"முயற்சி திருவினையாக்கும்"

(C-2460)

தொடர்புகளுக்கு: Sana 0776277767
127/3, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.